# சிங்கப்பூரில் விற்கப்படும் NUTRI-GRADE பானங்களுக்கான முத்திரையிடுதல் மற்றும் விளம்பரத் தகுதி வரம்புகள்

வழிகாட்டி ஆவணம்

சுகாதார மேம்பாட்டு வாரியம்

## உரிமைத் துறப்பு

இந்த ஆவணத்தின் உள்ளடக்கங்கள் சிங்கப்பூரில் விற்பனைக்குரிய Nutri-grade பானங்களுக்கான முத்திரையிடுதல் மற்றும் விளம்பரங்களுக்கான தகுதி வரம்புகளின் பொதுவான வழிகாட்டிக் குறிப்பாகும். இது விரிவானதொரு வழிகாட்டிக் குறிப்பல்ல. விளக்கப்படங்கள்அனைத்தும் குறிப்புகளுக்காக மட்டுமே மற்றும் அதே போன்றஅளவுகளில் வரையப்பட்டவை அல்ல.

இந்த ஆவணம் சட்ட ஆலோசனை வழங்காது. சட்ட ஆலோசனைக்கான ஆதாரமாக இதனைச் சார்ந்திருத்தலும் கூடாது. உங்களுக்கு ஏதாவது கேள்விகள் இருந்தால், தகுதி வரம்புகளின் முழு தொகுப்பை *Food Regulations*[1]-ல் காணவும் மற்றும்/அல்லது சுயமாக சட்ட ஆலோசனையை நாடவும்.

இந்த ஆவணத்தின் வெவ்வேறான மொழிப் பதிப்புகளுக்கிடையே ஏதேனும் முரண்பாடுகள் இருந்தால், ஆங்கிலப் பதிப்பு சரியானதானதென்று கொள்ளப்படும்.

[1] https://www.sfa.gov.sg/legislation

உள்ளடக்கங்கள்


பிரிவு 1: அறிமுகம் ..... 5

பின்னணி மற்றும் நடவடிக்கைகளின் சுருக்கம் ..... 5

ஆவணத்தின் நோக்கம் ..... 6

பிரிவு 2: திருத்தவிதிமுறைகளுக்குட்படக் கூடிய பொருட்கள் ..... 7

அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் ..... 10

பிரிவு 3: முத்திரையிடுதல் மற்றும் விளம்பரத் தகுதி வரம்புகளின் சுருக்கம் ..... 17

பிரிவு 4: ஊட்டச்சத்து தகவல்(NIP) ..... 17

பிரிவு 4.1 -NIP அமைவிடம் ..... 18

*தனித்தனியாகப் பொட்டலமிடப்பட்ட பானப் பொருட்கள் (உதாரணத்திற்கு குப்பி ,தகரக்குவளை, பொட்டலம், பை)* ..... *18*

*ஒரு தானியங்கு பானங்கள் விநியோகிப்பான் மூலம் விநியோகிக்கப்படும் பான தயாரிப்புகள்* ..... *19*

பிரிவு 4.2 NIP இன் தேவையான தகவல் மற்றும் வடிவம் ..... 19

*NIP க்கான பொதுவான தேவைகள்* ..... *19*

*உட்கொள்ளும் முன் ஒரு பானமாக திரவங்களுடன் மறுகட்டமைக்கப்பட **வேண்டிய** அல்லது நீர் சேர்த்து திரவமாக்கப்பட **வேண்டிய** மாவுப்பொருட்கள் அல்லது செறிவுணவுகளுக்கான தேவைகள்,* ..... *21*

*NIP-க்கான படிவம்* ..... *22*

பிரிவு 4.3: பகுப்பாய்வு முறைகள் மற்றும் இணக்கத் தேவைகள் ..... 24

அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் ..... 28

பிரிவு 5: Nutri-grade தர நிர்ணய அமைப்பு ..... 31

பிரிவு 5.1: ஒட்டுமொத்த தர நிர்ணய அமைப்பு ..... 31

பிரிவு 5.2: முழுப்படுத்தல் விதிகள் ..... 34

செயல்படுத்தப்பட்ட எடுத்துக்காட்டுகள் ..... 36

பிரிவு 6: Nutri-grade குறி ..... 48

பிரிவு 6.1: Nutri-grade குறி பற்றிய தகவல் ..... 48

பிரிவு 6.2: Nutri-grade குறிக்கான பொதுவான வரைகலை தேவைகள் ..... 50

***பல்பொருள் பொட்டலங்**களுக்கான விண்ணப்பத் தேவைகள் ("**பல்பொருள் பொட்டலங்**களின்" வரையறைக்கு பத்தி 16ஐப் பார்க்கவும்)* ..... *53*

பிரிவு 6.4 தயாரிப்பு தொகுப்புகளைத் தவிர வேறு அமைப்புகளுக்கான பயன்பாட்டுத் தேவைகள் ..... 56

அடிக்கடிகேட்கப்படும் கேள்விகள் ..... 59

பிரிவு 6.5 இணைப்புகள் மற்றும் ஆதாரங்கள் ..... 62

பிரிவு 7: விளம்பரத் தடை ..... 63

பிரிவு 7.1 பாதிக்கப்பட்ட விளம்பரங்கள் மற்றும் ஊடக தளங்கள் ..... 63

பிரிவு 7.2 விற்பனை இடங்களில் உள்ள விளம்பரங்களில் Nutri-grade குறியைக் காண்பித்தல் ..... 67

அடிக்கடிகேட்கப்படும்கேள்விகள் ..... 69

தொடர்புகள் ..... 76

## பிரிவு 1: அறிமுகம்

### பின்னணி மற்றும் நடவடிக்கைகளின் சுருக்கம்

1. 30 டிசம்பர் 2022- லிருந்து சிங்கப்பூரில் விற்கப்படும் முன்னரே பொட்டலமிடப்பட்ட பானங்கள் மற்றும் தானியங்கி இயந்திரங்களின் Nutri-grade பானங்கள் 30 டிசம்பர் 2021 வெளியிடப்பட்ட (**"திருத்த விதிமுறைகள்"**) உணவு (திருத்தம் எண் 2) விதிமுறைகளின்படி திருத்தப்பட்ட உணவுக் கட்டுப்பாடுகளில் புதிய முத்திரை தர வரம்புகளுக்கும் விளம்பரத் தடைகளுக்கும் உட்படுத்தப்படும். பொது மக்கள், தொழில் மற்றும் நிபுணத்துவ பங்குதாரர்களிடமிருந்து பெறப்பட்ட பின்னூட்டத்தை கவனமாக பரிசீலனை செய்த பின்னரும் தற்போதைய வெளியூர் மற்றும் உள்ளூர் ஆதாரங்களை மறுபரிசீலனை செய்தும் அந்த முடிவு எடுக்கப்பட்டது. அந்த திருத்த விதிமுறைகள் 30 டிசம்பர் 2022- லிருந்து நடப்புக்கு வரும்.
2. திருத்த விதிமுறைகளின் நோக்கங்களும் முக்கிய அம்சங்களும் பின்வருமாறு:

   a) <u>முத்திரைத் திட்டம் ("Nutri-Grade"):</u>வாடிக்கையாளர்கள் சர்க்கரை, மற்றும் கொழுப்பு அதிகமுள்ள பானங்களை அடையாளம் கண்டு மேலும் அறிந்துகொண்டு தெளிவாக முடிவெடுக்கலாம்; தேர்ந்தெடுப்பதற்கு மேலும் ஆரோக்கியமான தெரிவுகளையும் கொண்டிருக்க உதவுவதே Nutri-grade முத்திரையின் நோக்கமாகும். தொழில்துறையினர் தங்கள் பானப் பொருட்களை மறு சீரமைக்கத் தூண்டுவதும் அதன் நோக்கமாகும்.

   Nutri-Gradeமுத்திரை நான்கு நிறக் குறியீடுகளைக்கொண்டிருக்கும். தரம் A முதல்(ஆகக்குறைவான சர்க்கரை, கொழுப்பு அளவுகள்) தரம் D (ஆக அதிகமான சர்க்கரை, கொழுப்பு அளவுகள்) வரை. Nutri-ngrade பானங்கள் தரப்படுத்தும் கட்டமைப்புபடி "A", "B", "C" அல்லது "D" என தரப்படுத்தப்படும். "C" or "D" என தரப்படுத்தப்பட்ட பானங்களின் பொட்டலத்தின் முகப்பில் Nutri-Gradeமுத்திரை இடம் பெற்றிருக்க வேண்டும். Nutri-grade பானம் வியாபாரமாக இணையதளத்தில் விற்கப்பட்டால், அல்லது தானியங்கி இயந்திரத்திலிருந்து ((முன்னரே பொட்டலமிடப்பட்டு விற்கப்பட்டால், அல்லது வாடிக்கையாளர்கள் காணக் கூடிய வகையிலான தானியங்கி பான இயந்திரத்திலிருந்து கிடைக்கப்பெற்றால் ) (உணவுக்கட்டுப்பாடுகள், விதிமுறை 184E (4), விளக்கப்படி) 'Nutri-Grade'முத்திரையின் உருவம், வாடிக்கையாளர் காணும் வகையில் காட்சிப்படுத்த வேண்டும். "A" or "B" தர பானங்களுக்கு Nutri-grade முத்திரை விருப்புரிமைக்குட்பட்டது.

   b) <u>விளம்பரத் தடை:</u> விளம்பரத் தடையின் நோக்கம் வாடிக்கையாளர்களின் விருப்பங்கள் மீதான விளம்பரங்களின் தாக்கத்தை குறைப்பதாகும்.

   விதிமுறை 184F(2)- ல் விரிவாக இடம்பெற்றுள்ள குறிப்பிட்ட சூழ்நிலைகளைத் தவிர்த்து "D" தர Nutri-grade பானங்கள் தொடர்பான விளம்பரங்கள் தடை செய்யப்பட்டுள்ளன. விற்பனை இடங்களில்"D" தர Nutri-grade பானங்களின் விளம்பரங்கள் Nutri-grade முத்திரையின் உருவத்தை காட்சிப்படுத்த வேண்டும்

   c) <u>ஊட்டச்சத்து தகவல்(NIP):</u>Nutri-grade முத்திரைத் திட்டம் மற்றும் விளம்பரத்தடையை அமலாக்க, அனைத்து Nutri-grade பானங்களிலும் அந்த Nutri-Grade பானத்திலுள்ள ஆற்றல் அளவு, புரதச்சத்து, மாவுச்சத்து,

கொழுப்பு, மொத்தச் சக்கரை மற்றும் கொழுப்பு அளவுகளை குறிப்பிடும் ஊட்டச்சத்து தகவல் இடம்பெற்றிருக்க வேண்டும்.

3. வாடிக்கையாளர்கள் அதிக அளவு சர்க்கரையும், கொழுப்பும் உள்ள பானங்களை அடையாளங்கண்டு மேலும் தகவலறிந்த, ஆரோக்கியமான பானங்களை தேர்ந்தெடுக்க உதவுவதும், வாடிக்கையாளர்களின் விருப்பங்கள் மீதான விளம்பரங்களின் தாக்கத்தை குறைப்பதும் தொழில்துறையின் மறுசீரமைப்புக்கு தூண்டுவதும் அந்த விளம்பரத் தடைகளின் நோக்கமாகும். வாடிக்கையாளர்களின் போக்கையும் விருப்பத் தேர்வுகளையும் உருமாற்றும் நிலையான அணுகுமுறையின் ஒரு பகுதியாக சந்தையில் ஆரோக்கியமான பொருட்களே கிடைக்கும் மாற்றத்தை கொண்டுவர கற்பித்து ஊக்குவிக்கும் சுகாதார அமைச்சு MOH மற்றும் சுகாதார மேம்பாட்டு வாரியத்தின் (HPB) தற்போதைய முயற்சிகளுக்கு அவை உறுதுணையாக இருக்கும்.

## ஆவணத்தின் நோக்கம்

4. இந்த ஆவணம், திருத்த விதிமுறைகள் நடப்புக்கு வரும் போது உணவுக் கட்டுப்பாடுகளின் தகுதி வரம்புகளை, தொழில்துறை பங்குதாரர்கள் அனுசரிக்க உதவ Nutri-Grade பானங்களுக்கான முத்திரை மற்றும் விளம்பர தகுதி வரம்புகள் குறித்த பொதுவான ஒரு வழிகாட்டியாகும்.

5. இந்த ஆவணம் பின்வருபனவற்றுடன் இணைந்து படிக்கப்பட வேண்டும்:

   a) Nutri-Grade முத்திரையின் விவரக்குறிப்புகள்[2]. உணவு கட்டுப்பாடுகள், விதிமுறை184D(5)-ல் குறிப்பிடப்பட்ட Nutri-grade முத்திரைக்கான கட்டாய விவரக்குறிப்புகளை வழங்குகிறது.

   b) Nutri-Grade முத்திரையின்வரைபடப்பயன்பாடுகளுக்கான பயனர் வழிகாட்டி[3], Nutri-grade முத்திரையின் வரைபடப் பயன்பாடுகள் குறித்து வழிகாட்டுதல்கள் வழங்குகிறது.

[2] HPB இன் இணையதளத்தின் "வளங்கள்" பிரிவின் கீழ் ஆவணம் கிடைக்கிறது https://www.hpb.gov.sg/healthy-living/food-beverage/nutri-grade.

[3] ஆவணம் HPB இன் இணையதளத்தின் "வளங்கள்" பிரிவின் கீழ் கிடைக்கிறது https://www.hpb.gov.sg/healthy-living/food-beverage/nutri-grade.

## பிரிவு 2: திருத்தவிதிமுறைகளுக்குட்படக் கூடிய பொருட்கள்

6. சிங்கப்பூரில் விற்பனைக்குரிய Nutri-grade பானங்களுக்கு திருத்த விதிமுறைகள் பொருந்தும். உணவு கட்டுப்பாடுகள்,விதிமுறைகள் 2(1) மற்றும்184A(1), -ல் “Nutri-Grade பானம்” விவரிக்கப்பட்டுள்ளது, பத்தி 8-ல் கொடுக்கப்பட்ட விளக்கப்படி விதிமுறை184A-குள் வர்ணனை பொருந்துவதாக இருந்தாலொழிய பின்வருபவை உட்படும்.

   a) குப்பிகள், தகரக் குவளைகள், அட்டைப் பெட்டிகள், பொட்டலங்கள் அல்லது இது போன்ற மற்ற கொள்கலன்களில் முன்கூட்டியே விற்பனைக்கத்தயாராக பொட்டலமிடப்பட்டு, உட்கொள்ளத் தயார் நிலையில் உள்ள முன்னரேபொட்டலமிடப்பட்ட பானங்கள்.

   b) பானமாக உட்கொள்ளும் முன் முழுமையாக்கப்பட அல்லது நீர் சேர்த்து திரவமாக்க வேண்டிய மாவுப்பொருட்களாக, அல்லது செறிவுணவாக உள்ள முன்னரே பொட்டலமிடப்பட்ட பானங்கள்; மற்றும்

   c) பானத்தைவாங்கும் ஒருவர் தான் விரும்பியபடிபானத்தில் சேர்க்கப்பட்ட எந்தப் பொருளின் அளவையும் மாற்றியமைக்கும் விருப்புரிமை இல்லாத முன்பே நிர்ணயிக்கப்பட்ட முறைப்படி முன்கூட்டியே பொட்டலமிடப்படாத பானங்களை வழங்கும் தானியங்கி பானஇயந்திரங்களின் பானங்கள் இவற்றில் தானியங்கி காப்பி இயந்திரங்களிலிருந்து கிடைக்கப் பெறும் பானங்கள் மற்றும் ஊற்றுப்பானங்கள் அடங்கும்

7. மாற்றியமைத்தல் அல்லது திரவமாக்கல் இல்லாமல் அல்லது அதற்கு பின்னர் மனிதன் உட்கொள்வதற்கான பானமாக விற்கப்படும் எந்த பொருளும் பானங்களே.




8. பின்வரும் பொருட்கள் Nutri-grade பானங்கள்[4] <u>அல்ல</u>:

   a) 20°C வெப்ப அளவில் 0.5% (v/v)-க்கு மேல் மது கலந்த பானங்கள் (சந்தேக நிவர்த்திக்கு, 20°C வெப்ப அளவில் ≤0.5%(v/v) உள்ள மது கலவையற்ற பீர் அல்லது ஒயின் (திராட்சைச்சாராயம்) போன்ற மதுவுக்குப் பதிலான பானங்கள் இந்த துணைப் பத்தியில்அடங்காது);

---

[4] உணவு ஒழுங்குமுறைகள், விதிமுறைகள் 184A(1) மற்றும் (2) ஆகியவற்றில் பட்டியலிடப்பட்டுள்ள தயாரிப்புகள் இதில் அடங்கும்

பொறுப்புத் துறப்பு: இந்த ஆவணம் ஒரு வழிகாட்டியாக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் மற்றும் ஒரு சட்ட ஆலோசனையின் ஆதாரமாக நம்பப்படக்கூடாது. பானங்களுக்கான முத்திரை மற்றும் விளம்பரத் தேவைகளின் விரிவான விவரக்குறிப்புகளுக்கு, *உணவு விதிமுறைகளைப்* பார்க்கவும்

b) விற்கப்படும் இடங்களில் கையால் தயாரிக்கப்படும் பானங்கள்;

c) வருங்கால வாடிக்கையாளர் ஒருவர் பானங்களில் சேர்க்கப்பட்டுள்ள பொருளின் அளவு எதனையும் தன் விருப்பப்படி மாற்றக்கூடிய பானங்கள்;

d) உணவு கட்டுப்பாடுகள்,விதிமுறை 184A(2)-ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி பின்வரும் நிபந்தனைகளில் குறைந்தது ஒன்றையாவது நிறைவேற்றும் சிறப்பு நோக்கத்துடனான உணவுகள்:

i. மருத்துவ மேற்பார்வையின் கீழான பயன்பாட்டுக்கென்று முத்திரையிடப்பட்ட சிறப்பு மருத்துவ நோக்கத்துக்காக;

ii. மருத்துவமனைகள், பராமரிப்பு இல்லங்கள் மற்றும் தாதிமை இல்லங்கள் போன்ற இதரகுடியிருப்பாளர் பராமரிப்பு இல்லங்களில் உள்ள நோயாளிகளுக்கு மட்டும் சேவை வழங்கும் நோக்கத்துடன் வழங்கப்படுதல்

iii. குழந்தைகளுக்கான உணவு;

iv. 6 மாதம் அல்லது அதற்கு மேற்பட்ட வயதுள்ள குழந்தை அல்லது இளம் குழந்தைகளுக்கு (இளம் குழந்தைகள் என்பது 12 மாதங்களுக்கு மேல் 3 வயதுவரை (36 மாதங்கள்) உள்ள குழந்தைகளாகும்) பால் மறக்கச் செய்தலின் ஒருபகுதியாக திரவமாக உபயோகமாகும் அடுத்தக்கட்ட உணவு;

v. எடை கட்டுப்பாட்டு உணவாக பயன்படும் அதாவது ஒருநபரின் அன்றாட மொத்த உணவுக்குப் பதிலாக வழங்கப்படும் உணவு;

vi. நீரிழிவு நோய்கான உணவு; அல்லது

vii. நோய், கோளாறு அல்லது மற்ற நிலைமையினால் குறிப்பிட்ட அளவு சர்க்கரை (சுக்ரோஸ் உட்பட ஆனால் வரையறுக்கப்படவில்லை) அல்லது அதிகப்படியான கொழுப்பு உட்கொள்ளும் அவசியமுள்ள ஒருவர்

9. உணவு விற்பனைச் சட்டத்தின் 2A(3)"உணவு" என்ற பொருள் விளக்கத்திலிருந்து விலக்கப்பட்ட பொருட்கள் (எடுத்துக்காட்டாக, சுகாதாரப் பொருட்கள் சட்டத்தின் அர்த்தத்திற்குள் அடங்கும் சுகாதாரப் பொருட்கள்) திருத்தவிதி முறைகளில் அடங்காது என்பதை தொழில்துறை கவனத்தில் கொள்ளவேண்டும்.

10. ஒரு பொருள் "Nutri-Grade பானமா " என்று கருதப்படுகிறதா என்பதை தீர்மானிக்க உருவப்படம் 1 - ல் உள்ள செயல்வழி விளக்கப்படத்தை பயன்படுத்தலாம்.

படம்1: ஒரு பொருள் “Nutri-grade பானமா ” என்று கருதப்படுகிறதா என்பதை தீர்மானிக்க செயல்வழி விளக்கப் படம்.

1) அந்த பொருள் ஒரு பானமா? பானங்கள் உள்ளடங்கும் ஆனால் வரையறுக்கப்படவில்லை:

- பால் மற்றும் பால் பானங்கள்
- சோயா அவரை பானங்கள் உட்பட பால் அல்லாத பாலுக்குப் பதிலான பானங்கள்
- தேநீர், காப்பி மற்றும் கொக்கோ பானங்கள்
- தானிய பானங்கள்
- பழச்சாறுகள் மற்றும் பழச்சுவையுடன் கூடிய மது அல்லாத பானங்கள்.
- சுவையூட்டப்பட்ட மது அல்லாத பானங்கள். அல்லது சாறு
- குளிர் பானங்கள்
- ஆற்றல் பானங்கள்
- தண்ணீர் மற்றும் சுவையூட்டப்பட்ட தண்ணீர்
- பானமாக உட்கொள்ளக்கூடிய வேறு எந்த பொருளும்

இல்லை → Nutri-Grade பானமாக கருதப்பட வில்லை

ஆம் ↓

**2)** இவற்றை உள்ளடக்கும் அந்தப் பொருள் விதிமுறை **184A(1)(a)** முதல்**(d)** -ல் மற்றும் **(2)**-ல், பட்டியலிடப்பட்டுள்ளதா

- ஒரு மது பானம் (அதாவது>0.5% (v/v) மதுபானம் 20ºC அளவில்);
- விற்கப்படும் இடத்தில் கையால் தயாரிக்கப்பட்ட ஒருபானம்;
- வருங்கால வாடிக்கையாளர் ஒருவர் பானத்தில் சேர்க்கப்பட்டுள்ள பொருளின் அளவு எதனையும் தன் விருப்பப்படி மாற்றக் கூடிய பானம்;
  அல்லது
- விதிமுறை 184A(2)-ன் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிபந்தனைகளை நிறைவு செய்யும் சிறப்பு நோக்கத்துக்குரிய உணவான ஒரு பானம். இது பத்தி 8(d)-ல் மேலும் விளக்கமளிக்கப்பட்டுள்ளது (எடுத்துக்காட்டாக, குழந்தை மற்றும் அடுத்தக் கட்ட உணவு, சிறப்பு மருத்துவ நோக்கங்களுக்கான பொருட்கள், நீரிழிவு நோய்க்கேற்ற உணவு)

ஆம் → Nutri-Grade பானமாக கருதப்பட வில்லை

இல்லை ↓

**Nutri-Grade**பானமாகக் கருதப்படுகிறது

## அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

**A. எந்தப் பொருட்கள் Nutri-grade பானங்களாக கருதப்படுகின்றன?**

பட்டியல் 2 -ல் பொதுவாக விசாரிக்கப்படும் சில பொருட்கள் குறித்தும் அவை Nutri-grade பானங்கள் பிரிவின் கீழ் வருபவையா என்றும் கேள்விகள் உள்ளன. இது தற்போது சந்தையில் பொதுவாகக் கிடைக்கும் பொருட்களின் அடிப்படையில் உருவான பொதுவான வழிகாட்டிக் குறிப்பே அன்றி முழுமையான பட்டியல் அல்ல என்பதை கவனத்தில் கொள்ளுங்கள். குறிப்பிட்ட பொருட்களுக்கான வழிகாட்டலுக்கு தயவுசெய்து HPB யை (Nutri-Grade@hpb.gov.sg). தொடர்பு கொள்ளவும்.

பட்டியல் 2: பொதுவாகக் விசாரிக்கப்படும் பொருட்களும் வகைப்பாடுகளும்

| வகை | துணை வகை/உதாரணங்கள் | பொருட்கள் Nutri-grade பானங்களாக கருதப்படுகின்றனவா?<br>(ஆம்/இல்லை; காரணங்கள்) |
|---|---|---|
| சாறுகள் மற்றும் சாறுடன் கூடிய பானங்கள் (மது அல்லாத பானங்கள் செறியுணவுகள் உட்பட) | • 100 % சாறுகள்<br>• கெட்டிச் சாறு | ஆம்;<br>• பானமாக உட்கொள்ள ஏற்றது |
| குளிர் பானங்கள் | • கோலா-சுவையுள்ள பானங்கள்<br>• பழச்சாறு -சுவையுள்ள சோடா பானங்கள் | ஆம்;<br>• பானமாக உட்கொள்ள ஏற்றது |
| சம அளவு உப்பு/ சர்க்கரையுள்ள சத்துள்ள பானம் மற்றும் ஆற்றல் தரும் பானங்கள் | • திரவ மற்றும் மாவு வடிவிலான சம அளவு உப்பு/சர்க்கரையுள்ள சத்துள்ள பானம் (அதாவது, உடகொள்ளுமுன் திரவமாக்கும் அவசியமுள்ளது) | ஆம்;<br>• பானமாக உட்கொள்ள ஏற்றது |
| தண்ணீர் | • வெற்று குடிநீர் | ஆம்; |

| | | |
|---|---|---|
| | • சுவையூட்டப்பட்ட நீர்<br>• கரியமில வாயு கலந்த சோடா நீர் | • பானமாக உட்கொள்ள ஏற்றது |
| ஆசிய பானங்கள் | • சாமந்திப் பூ தேநீர்<br>• பார்லி | ஆம்;<br>• பானமாக உட்கொள்ள ஏற்றது |
| பால் பொருட்கள் மற்றும் பாலுக்குப் பதிலான மாற்றுப் பொருட்கள் | • பால் (முற்றும் கொழுப்புள்ள, கொழுப்பு குறைந்த, கொழுப்பற்ற) திரவ, அல்லது மாவு நிலை (அதாவது, உடகொள்ளுமுன் திரவமாக்கும் அவசியமுள்ளது)<br>• சோயா அவரை பால்<br>• கடலைப் பால்கள் மற்றும் பாலுக்குப் பதிலான மாற்றுப் பொருட்கள்(உதாரணத்திற்கு,பாதாம் பால்,அரிசிப் பால்கள்)<br>• புளிப்பேற்றிய பால் பானம் மற்றும் தயிர் பானம்) | ஆம்;<br>• பானமாக உட்கொள்ள ஏற்றது (உதாரணத்திற்கு,. ஒரு பானமாக அமைக்கப்பட்ட உணவுகளை கொண்டதன் ஒரு பகுதியாக சந்தையில் விற்கப்படுகிறது) |
| | • நீராவிப் பால்<br>• இனிப்பு சேர்ந்த அடர் பால்<br>• வெண்ணெய்<br>• பாலேடு<br>• பாலாடை<br>• தயிர்<br>• மோர்<br>• நெய் | இல்லை;<br>• பானமாக உட்கொள்ள ஏற்றதல்ல |
| தேநீர், காபி, கோகோ மற்றும் ஒத்த தயாரிப்புகள் | • உடனடி அல்லது கரையக்கூடிய காப்பி அல்லது தேநீர் (அதாவது, உடகொள்ளுமுன் திரவமாக்கும் அவசியமுள்ளது) | ஆம்;<br>• பானமாக உட்கொள்ள ஏற்றது |

| | | |
|---|---|---|
| | • உடனடியாக-அருந்தக்கூடிய காப்பி அல்லது தேநீர்<br>• நீர் கலந்து வடிகட்டிய பின்,விற்பனைக்கும் அருந்துவதற்கும் உள்ள தேநீர் தூள்<br>• விற்பனைக்கும் அருந்துவதற்கும் ஒரு பானமாக உள்ள நீர் கலந்து வடிகட்டிய பின் கிடைக்கும் காப்பிச் சக்கை,(உதாரணத்திற்கு,வரக் காப்பி பைகள், காப்பி இயந்திரங்களில் பயன்பாட்டுக்குள்ள காப்பிச் சக்கை அடங்கிய வில்லைகள்)<br>• மூலிகை அடங்கிய பானங்கள்<br>• கொக்கோ பானங்கள் | |
| | • விற்பனைக்காகவும் கச்சா பொருளாக சமையல்,சுட்டுச் செய்தல் முறை அல்லது மற்ற நோக்கங்களுக்காக (உதாரணத்திற்கு,.பொதுவான பயன்பாட்டுக்காக சாக்குப் பைகளில் விற்கப்படுபவை) உள்ள காப்பிக் கொட்டைகள்/சக்கை மற்றும் தேநீர் (எடுத்துக்காட்டாக, இலைகள், இலை மொட்டுக்கள்)<br>• கொக்கோ கொட்டைகள், நசுக்கப்பட்ட கொக்கோ விதைகள், கொக்கோ பசை, கொக்கோ மது, கொக்கோ துண்டுகள், கொக்கோ தூள், கொக்கோ வாசனைப்பொருள் | இல்லை;<br>• பானமாக உட்கொள்ள ஏற்றதல்ல |
| தானியப் பொருட்கள் | • உடனடி தானிய பானங்கள்(அதாவது, உட்கொள்ளுமுன் திரவமாக்கும் அவசியமுள்ளது) | ஆம்;<br>• பானமாக உட்கொள்ள ஏற்றது |

| | | |
|---|---|---|
| | • உடனடியாக உட்கொள்ளக்கூடிய தானிய பானங்கள் | |
| | • காலை உணவு தானியங்கள், ஓட்ஸ், “முவேஸ்லி” என்னும் தானியம், ஓட்ஸ் கலவையிலானது இத்யாதி.<br>• தானியத் துண்டுகள் | இல்லை;<br>• பானமாக உட்கொள்ள உள்ளதல்ல |
| சர்க்கரை/ இனிப்பு வடிவங்கள் | • அனைத்து வகை சர்க்கரை (வெள்ளைநாட்டுச் சர்க்கரை,கற்கண்டு, தூள் சர்க்கரை இத்யாதி.)<br>• தேன்<br>• வெல்லப்பாகு<br>• குளுக்கோஸ் சீரப் | இல்லை;<br>• பானமாக உட்கொள்ள ஏற்றதல்ல -இவை சேர்க்கைப் பொருட்கள் |
| இறைச்சி சாறு | • கோழி சாறு<br>• மீன் சாறு | இல்லை;<br>• பானமாக உட்கொள்ள ஏற்றது, குழம்புகள் அல்லது சூப்புகள் போல. |
| பறவைக் கூடுபான பொருட்கள் | • திரவ வடிவிலான பறவைக் கூடுபானம், ஒரு “பானமாக” விற்பனைக்கோ உட்கொள்வதற்கோ உள்ளது.(செறியுணவு உட்பட) | ஆம்;<br>• பானமாக உட்கொள்ள ஏற்றது |
| | • திடமான பறவைக் கூடுபானம் | இல்லை;<br>• பானமாக உட்கொள்ள ஏற்றதல்ல , |
| உணவுக்குப் பதிலாகப் பயன்படுத்தக் கூடிய பானங்கள் | • உணவுக்குப் பதிலான மாற்று உணவின் ஒரு பகுதி (எ.கா. ஊட்டச்சத்துள்ள கலவைப் பானங்கள்) | ஆம்;<br>• பத்தி8(d)-ல் குறிப்பிடப்பட்ட விதிவிலக்குக்கு உட்படாததால் Nutri-Grade பானங்களே |

| | | |
|---|---|---|
| | • மொத்த தினசரி உணவுக்குப் பதிலான மாற்று உணவு (அறுவை சிகிச்சைக்குப் பிந்திய பயன்பாடு) | இல்லை; <br>• பத்தி8(d)-ல் குறிப்பிடப்பட்ட விதிவிலக்குக்கு உட்பட்டதால் Nutri-Grade பானமல்ல |

**B. "விற்கப்படும் இடத்தில் கையால் தயாரிக்கப்பட்ட பானங்கள்" Nutri-grade பானங்களாக கருதப்படவில்லை என்று பத்தி 8(b) குறிப்பிடுவதன் பொருள் என்ன?**

- தற்போது, ஒரே இடத்தில் தயாரிக்கப்பட்டு விற்கப்படும் பானங்கள் **Nutri-grade** பானங்களில் அடங்காது. இத்தகைய பானங்களுக்கான கட்டுப்பாடுகள் பின்னொரு தேதியில் வெளியிடப்படும். இத்தகைய பானங்களின் உதாரணங்கள்:
  - உணவகம், உணவு நிலையம் , உணவு விடுதி அல்லது கூடம் போன்ற உணவு பான அமைப்புகளில் உடனடியாக உட்கொள்வதற்கு புதிதாக தயாரிக்கப்பட்ட பானங்கள், இவை உட்பட:
    - துரிதமான தொழில் இயக்கத்துக்கு விற்பனைக்கு முன்கூட்டியே பகுதியாக பிரித்து தயாராக வைத்தல் (உதாரணத்திற்கு,அதே இடத்தில் தயார் செய்து விற்பனைக்கு முன்பு தனித்தனிக் குவளைகளில் ஊற்றி சீல் வைக்கப்பட்ட பார்லி அல்லது ஐஸ் எலுமிச்சை தேநீர் ) ; மற்றும்
    - ஒரு மத்திய உணவு பான அமைப்பில் தயாரிக்கப்பட்டு அதே உணவுத் தொழிலை நடத்துபவர் விற்பனைக்காக துரிதமான தொழில் இயக்கத்துக்கு மற்ற அமைப்புகளுக்கு விநியோகிப்பது (உதாரணத்திற்கு,பொழுதுபோக்கு பானங்களாக உட்கொள்ள உருவாக்கப்பட்ட மூலிகை மருந்துகள் ஒரு மத்திய மூலிகை பான அமைப்பில் தயாரிக்கப்பட்டு மற்ற சில்லறை விற்பனைக் கடைகளுக்கு விநியோகிக்கப்படுவது);
  - உணவு பான அமைப்பொன்றில் புதிதாக தயாரிக்கப்பட்ட பானங்கள், பொட்டலமாக எடுத்துச் செல்ல அல்லது வாடிக்கையாளருக்கு விநியோகிக்க (உதாரணத்திற்கு," குமிழி தேநீர்" தேநீர்,காப்பி/தேநீர், சோயா பால்);
  - வீட்டில் தொழில் புரிவோரின் வீடுகளில் புதிதாக தயாரிக்கப்பட்ட பானங்கள் (உதாரணத்திற்கு,kombucha);
  - தூள்கள்/செறியுணவு கொண்டு உட்கொள்ளும்முன் திரவமாக்கப்பட்டு (உதாரணத்திற்கு,3-குள்-1 தூள் கொண்டு கலந்த சூடான காப்பி) உணவு பான அமைப்பில் வாடிக்கையாளர்களுக்கு பரிமாறப்பட்ட புதிதாக தயாரிக்கப்பட்ட பானங்கள்;

- ▪ எனினும், அந்த தூள்/ செறியுணவே(உதாரணத்திற்கு,.3-குள்-1தூள்) முன்னதாக பொட்டலமிடப்பட்டது,சிங்கப்பூரில் விற்பனைக்குள்ளதென்றால் திருத்த விதிமுறைகளுக்குட்பட்டது என்பதை கவனத்தில் கொள்ளுங்கள்.
- விருப்பப்படி தெரிவு செய்ய அனுமதிக்கும் தானியங்கி பான இயந்திரங்களில் கிடைக்கப்பெறும் புதிதாக தயாரிக்கப்பட்ட பானங்கள் (உதாரணத்திற்கு,வருங்கால வாடிக்கையாளர் ஒருவர் பயன்படுத்தும் சர்க்கரை அல்லது பாலின் அளவை தேர்ந்தெடுக்க அனுமதிக்கும் காப்பி/தேநீர் இயந்திரம்)
- உணவு பான அமைப்பில் சில்லறை பொட்டலத்திலிருந்து தனியாகப் பிரித்து வைக்கப்பட்ட பானங்கள் (உதாரணத்திற்கு, பொட்டலமாக உணவு பான அமைப்புக்கு வழங்கப்பட்டு, அதே இடத்தில் தனித்தனிக் குவளைகளில்பிரித்து வைக்கப்பட்ட தகரக் குவளை பானங்கள்);
  - ▪ எனினும், பொட்டலத்திலிருந்து வழங்கப்பட்ட பானம் (உதாரணத்திற்கு தகரக் குவளை பானங்கள்) முன்னதாக பொட்டலமிடப்பட்டது, சிங்கப்பூரில் விற்பனைக்குள்ளதென்றால் திருத்த விதிமுறைகளுக்குட்பட்டது.
- உணவு பான அமைப்பில் மொத்தமாக பொட்டலத்திலிருந்து பகுதியாக பிரித்து வைக்கப்பட்ட பானங்கள் (உதாரணத்திற்கு மொத்தமாக பொட்டலமிடப்பட்டு உணவு பான அமைப்புக்கு வழங்கப்பட்டு, அதே இடத்தில் தனித்தனிக் குப்பிகளில் பிரித்து வைக்கப்பட்ட சோயா பால்).
  - ▪ சிங்கப்பூரில் விற்பனைக்கென்று இல்லையென்றால் (உதாரணத்திற்கு B2B மட்டும்) மொத்தமாக பொட்டலமிடுதல் திருத்த விதிமுறைகளுக்கு பொருந்தாது.

**c. பத்தி 8(d)(iv), -குள் உள்ள விளக்கத்தின் நோக்கத்துக்காக "Nutri-grade பானமாக கருதப்படுவதிலிருந்து விலக்களிப்படக்கூடிய "அடுத்தக் கட்ட உணவாக" தகுதிபெறும் பொருட்கள் எவை?**

- 6 மாதம் அல்லது அதற்கு மேற்பட்ட வயதுள்ள குழந்தை அல்லது இளம் குழந்தைகளுக்கு (அதாவது இளம் குழந்தைகள் என்பது 12 மாதங்களுக்கு மேல் 3 வயதுவரை (36 மாதங்கள்) உள்ள குழந்தைகளாகும்) பால் மறக்கச் செய்தலின் ஒருபகுதியாக திரவமாக உபயோகமாகும் அடுத்தக்கட்ட உணவு;
- எடுத்துக்காட்டாக, 12 முதல் 36 மாதங்களுக்கிடைப்பட்ட வயதுள்ள குழந்தைகள் உட்கொள்வதற்கான ஒரு பொருள், "Nutri-grade பானமாக" கருதப்படமாட்டாது.
- எனினும்,36 மாதங்களுக்கு மேற்பட்ட வயதுடைய குழந்தைகள்உட்கொள்வதற்கான ஒரு பொருள் "அடுத்தக்கட்டஉணவாக" கருதப்படமாட்டாது. ஆதலால் அது "Nutri-Grade பானமாக கருதப்படும். [பத்தி 8(d)-ல் விளக்கமளிக்கப்பட்டவிதிமுறை 184A-குள் மற்ற எந்தவொரு நிபந்தனையையும்அது நிறைவேற்றவில்லை என்று அனுமானிக்கும் பட்சத்தில்]. இதுவும் உட்பட:

- (உச்ச வயது வரம்பு இல்லாத) 12மாதங்களுக்கு மேற்பட்ட வயதுடைய குழந்தைகள் உட்கொள்வதற்கான ஒரு பொருள்[5]
- 1 முதல் to 10 வயதுக்கிடைப்பட்ட குழந்தைகள் உட்கொள்வதற்கான ஒரு பொருள்

[5] 6 மாதம் அல்லது அதற்கு மேற்பட்ட வயதுள்ள குழந்தை அல்லது இளம் குழந்தைகளுக்கான அடுத்த கட்ட உணவும் குழந்தைகள் உணவாகவே உணவு விதிமுறை 252 ஆவது விதியின் கீழ் கருதப்படும்.

## பிரிவு 3: முத்திரையிடுதல் மற்றும் விளம்பரத் தகுதி வரம்புகளின் சுருக்கம்

11. சிங்கப்பூரில் விற்பனைக்கான Nutri-grade பானங்கள் பிரிவு 5-ல் குறிப்பிடப்பட்ட தர நிர்ணய முறைப்படி அவற்றின் தரத்தின் அடிப்படையில் பட்டியல் 3ல்-உள்ள தகுதி வரம்புகளுக்கு கட்டுப்பட வேண்டும் .

<u>பட்டியல் 3: Nutri-grade பானங்களுக்கான தகுதி வரம்புகளின் சுருக்கம்</u>

<table>
<tr><th>தரம்</th><th>A</th><th>B</th><th>C</th><th>D</th></tr>
<tr><td rowspan="3">தகுதி வரம்புகள்</td><td colspan="4">ஊட்டச்சத்து தகவலின் கட்டாய முத்திரை தேவைகள்</td></tr>
<tr><td colspan="2">Nutri-grade சின்னத்தின் முத்திரையிடுதல் தன்னிச்சையானது</td><td colspan="2">Nutri-grade சின்னத்தின் முத்திரையிடுதல் கட்டாயமானது</td></tr>
<tr><td colspan="3"></td><td>விளம்பரத் தடையை பொறுத்தது</td></tr>
</table>

## பிரிவு 4: ஊட்டச்சத்து தகவல்(NIP)

12. உணவுக் கட்டுப்பாடுகள், விதிமுறை 184C(6)-ல் குறிப்பிடப்பட்டுள்ளவற்றை தவிர, (பத்தி13-ல்மேலும் விளக்கமளிக்கப்பட்டுள்ளது) சிங்கப்பூரில் விற்பனைக்கான அனைத்து Nutri-grade பானங்களும் (பிரிவு2 காணவும்), தரத்தை பொருட்படுத்தாது, ஊட்டச்சத்து தகவல் முத்திரையிடப்பட வேண்டும். ஊட்டச்சத்து தகவல்முத்திரை தகுதி வரம்புகள் விதிமுறை 184C-ல் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளன.

    a) முன்னரே பொட்டலமிடப்பட்ட Nutri-grade பானங்களுக்கு, Nutri-Grade பானத்தின் பொட்டலத்தில் ஊட்டச்சத்து தகவல் முத்திரை இடம் பெற்றிருக்க வேண்டும்

    b) விற்பனையில் தானியங்கி பான இயந்திரமொன்றில் விற்கப்படும் Nutri-grade பானங்களுக்கு, ஊட்டச்சத்து தகவலில் தேவைப்படும் தகவல் அதனை பார்வையிட விரும்புகிற எவர் ஒருவருக்கும் விதிமுறை 184C(5)-ல் விவரிக்கப்பட்டுள்ள படிவத்தில் கிடைக்கும்படி செய்யவேண்டும். (பத்திகள்18-19-ல் மேலும் விளக்கமளிக்கப்பட்டுள்ளது)

13. உணவுக் கட்டுப்பாடுகள், விதிமுறை 184C(6)-ல் பட்டியலிடப்பட்டுள்ள Nutri-Gradeபானங்கள் NIP-ல் முத்திரையிடப்பட வேண்டிய <u>அவசியமில்லை</u>. பின்வரும் பொருட்கள் தான் அவை, அவற்றில் கலோரிகள், புரதச்சத்து,கொழுப்பு, சீரமைக்கப்பட்ட கொழுப்பு, மாவுச் மற்றும் சர்க்கரை ஏதுமில்லை என்றால்:

    a) காப்பி அல்லது காப்பியின் தயாரிப்பு;

    b) குடிக்கும் நீர்;

    c) மூலிகை மருந்து அடங்கியது;

    d) தேநீர் அல்லது தேநீரின் தயாரிப்பு;

## பிரிவு 4.1 -NIP அமைவிடம்

### தனித்தனியாகப் பொட்டலமிடப்பட்ட பானப் பொருட்கள் (***உதாரணத்திற்கு*** குப்பி ,தகரக்குவளை, பொட்டலம், பை)

14. அந்த NIP எடுப்பாக மற்றும் நன்றாக தெரியும்படி பொட்டலத்தில் தெளிவாகவும் குறிக்கப்படவேண்டும் அல்லது இறுக்கமாக இணைக்கப்பட வேண்டும். இதனை ஒட்டு வில்லைகளைப் பயன்படுத்தி சாதிக்கலாம்.
    a) "இறுக்கமாக இணைத்தல்" என்பது NIPஅடங்கிய முத்திரை எளிதில் அகற்றக் கூடியதாக இருக்கக்கூடாது மற்றும் பொட்டலம் உட்கொள்ளப்படக்கூடிய எதிர்பார்க்கப்படும் காலக்கெடு வரை பொட்டலத்துடனேயே இணைந்திருக்கும் சாத்தியமுள்ளதாக இருக்க வேண்டும் என்று பரிந்துரைக்கப்படுகிறது.
    b) தொடர்ந்து தெளிவாக இருக்க, NIP தண்ணீர் உட்புகாத வகையில் இருப்பதோடு திரவமாகும்/கசியும் போது மை கரைந்து ஓடக் கூடாது என்று பரிந்துரைக்கப்படுகிறது.
15. அந்த NIP பானப் பொட்டலத்தின் மேற்பரப்பு எதிலும் இடம்பெற்றிருக்கலாம். சேர்க்கைப் பொருட்களின் பட்டியலோடு அல்லது அதற்கு மிக அருகில் வைக்கும்படி பரிந்துரைக்கப்படுகிறது.

### *பல்பொருட்களைக் கொண்ட பொட்டலங்கள்*

16. முன்னரே பொட்டலமிடப்பட்ட பல்வேறு தனித்தனி பானங்களைக் கொண்டிருக்கும் பொட்டலமே பல்பொருள் பொட்டலமாகும். இவை, மொத்தமாகப் பொட்டலமிடப்பட்டு ஒற்றைப் பொருளாக விற்கப்படுகின்றன. பல்பொருள் பொட்டலங்களுக்குள் தனித்தனி பானங்கள் பிளாஸ்டிக் தாள் அல்லது அட்டைப் பெட்டி பொட்டலம் அல்லது பெட்டி போன்ற வெளிப்புற பொட்டலங்களுக்குள் வழக்கமாக ஒழுங்குபடுத்தப்பட்டு மொத்தமாகப் பொட்டலமிடப்படுகின்றன.
17. பல்பொருள் பொட்டலங்களுக்கான முத்திரை தகுதி வரம்புகள் உணவுக் கட்டுப்பாடுகள், விதிமுறை 184C(3)-ல் குறிப்பிடப்பட்டுள்ளன. பல்பொருள் பொட்டலங்களுக்கு NIP பின்வரும் முறைகளில் குறிக்கப்படலாம். அல்லது இறுக்கமாக இணைக்கப்படலாம்:
    a) பல்பொருள் பொட்டலத்தின் வெளிப்புறப் பொட்டலத்தில் அல்லாமல் அதில் உள்ள முன்னரே பொட்டலமிடப்பட்டNutri-grade பானப் பொட்டலம் மீது, அல்லது
    b) பல்பொருள் பொட்டலத்தின் வெளிப்புறத்தில், பொட்டலத்தில் உள்ள ஒவ்வொரு பொருளும் தனித்தனியாக விற்கக் கூடாது என்ற வாசகம் (உதாரணத்திற்கு "தனித்தனியே விற்கக் கூடாது") இடம்பெற்றிருந்தால் Nutri-Gradeபானங்களைக் கொண்ட பல்பொருள் பொட்டலங்களில் வெளிப்புறத்தில் முத்திரை இடம்பெற்றிருக்கவேண்டும்; முன்னரே பொட்டலமிடப்பட்ட Nutri-Grade பானங்களின் தனித்தனிப் பொட்டலங்களில் அல்ல.

விதிமுறை 184C(3)-க்கு இணங்க, தொழில்துறை, ஒவ்வொருதனி பானத்தின் பொட்டலத்திலும் பல்பொருள் பொட்டலத்தின் வெளிப்புறப் பொட்டலத்திலும் NIP-யை குறிக்கலாம் அல்லது பாதுகாப்பாக இணைக்கலாம்.

### *ஒரு தானியங்கு பானங்கள் விநியோகிப்பான் மூலம் விநியோகிக்கப்படும் பான தயாரிப்புகள்*

18. ஒரு தானியங்கி பான விநியோகிப்பான் மூலம் விற்கப்படும் பானங்களுக்கான NIP லேபிளிங் தேவைகள் உணவு ஒழுங்கு முறைகளானது, ஒழுங்கு முறைகள் 184C(4) மற்றும் 184C(5) ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளன. தானியங்கு பானங்கள் விநியோகிப்பான் மூலம் சில்லறை விற்பனையில் விற்கப்படும் பானங்களுக்கு, NIP இல் தேவைப்படும் ஊட்டச்சத்து தகவலானது, தகவலைப் பார்க்க விரும்பும் எந்தவொரு நபருக்கும் கண்டிப்பாகக் கிடைக்க வேண்டும்.

19. ஊட்டச்சத்து தகவல் பின்வரும் படிவங்களில் ஏதேனும் ஒன்றில் கிடைக்கப்பெறலாம்:

    a) தானியங்கு பான விநியோகியில் தெளிவாக அல்லது அருகில் காட்டப்படும் (எ.கா. டிஸ்பென்சருக்கு அருகில் காட்சிக்கு நிற்கும் நிலைப்பான்);

    b) ஒரு இணையதளம் அல்லது நபர் பார்க்கக்கூடிய பிற மின்னணு பதிவில் (எ.கா. QR குறியீடு மூலம் மின்னணு முறையில் அணுகப்பட்டது); அல்லது

    c) ஒரு நபரின் கோரிக்கையின் பேரில் காட்டப்படும் அல்லது வழங்கப்படும் ஒரு ஆவணத்தில் (எ.கா. கோரிக்கையின் பேரில் வழங்கப்பட்ட தகவல் தாள்).

## பிரிவு 4.2 NIP இன் தேவையான தகவல் மற்றும் வடிவம்

### *NIP க்கான பொதுவான தேவைகள்*

20. NIP பன்னிரண்டாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தில் அல்லது பொது-இயக்குனர் ஏற்றுக்கொள்ளக்கூடிய வேறு ஏதேனும் ஒத்த வடிவத்தில் இருக்க வேண்டும்.

21. NIP இன் உரை ஆங்கிலத்தில் தெளிவாக அச்சிடப்பட்டிருக்க வேண்டும். அது மற்ற மொழிகளுடன் இணைந்தும் இருக்கலாம்.

22. **கட்டாய அறிவிப்பு:** ஒழுங்குமுறை 184C (1) க்கு உட்பட்டு, பத்தி 38 இல் விளக்கப்பட்டுள்ளதுபடி, NIP ஆனது ஆற்றல் மதிப்பையும் பின்வரும் ஊட்டச்சத்துக்களின் அளவையும் குறிப்பிட வேண்டும் (இனிமேல் "கட்டாய ஊட்டச்சத்து" என்று அழைக்கப்படுகிறது):

    a) புரதம்;

    b) மாவுச்சத்து ;

    c) மொத்த சர்க்கரை[6;]

    d) கொழுப்பு;

[6] பொருளில் கார்போஹைட்ரேட் இல்லை என்றால், "மொத்த சர்க்கரை" அளவை அறிவிக்க வேண்டிய கட்டாயம் இல்லை (*உணவு ஒழுங்குமுறைகள்*, ஒழுங்குமுறை 184C(1)(c) ஐப் பார்க்கவும்).

e) செறிவூட்ட கொழுப்பு[7]; மற்றும்

f) பானத்தைப் பொறுத்த ஊட்டச்சத்து உரிமை கோரப்படும் மற்ற சத்துக்கள்.

23. **துணை அறிவிப்பு**: கட்டாய ஊட்டச்சத்துக்களுக்கு கூடுதலாக, NIP இல் தன்னார்வ அடிப்படையில் மற்ற ஊட்டச்சத்துக்களின் அளவு குறிப்பிடப்படலாம் (இனிமேல் "துணை ஊட்டச்சத்து" என்று அழைக்கப்படுகிறது). இவை அடங்கும்:

   a) மோனோ அன்சாச்சுரேட்டட் கொழுப்பு, பாலிஅன்சாச்சுரேட்டட் கொழுப்பு, ஒமேகா கொழுப்பு அமிலங்கள் மற்றும் டிரான்ஸ் கொழுப்பு, செறிவூட்ட கொழுப்புக்குப் பிறகு கொழுப்பின் துணைக் குழுக்களாகச் செருகப்படலாம்;

   b) சேர்க்கப்பட்ட சர்க்கரை, **லாக்டோஸ்** மற்றும் **கேலக்டோஸ்**, இவை மொத்த சர்க்கரையின் துணைக் குழுக்களாகச் செருகப்படலாம்;

   (குறிப்பு: இந்த ஊட்டச்சத்துக்களைக் கொண்ட பானங்களுக்கு லாக்டோஸ் மற்றும் கேலக்டோஸின் அறிவிப்பு வலுவாக ஊக்குவிக்கப்படுகிறது. லாக்டோஸ் மற்றும் கேலக்டோஸ் ஆகியவற்றை அறிவிப்பதன் தொடர்பைப் பற்றிய கூடுதல் விளக்கத்திற்கு, Nutri-grade கிரேடிங் முறை மற்றும் குறியுடன் தொடர்புடைய பத்தி 41(a) ஐப் பார்க்கவும்)

   c) நார்ச்சத்து உணவு;

   d) சோடியம்; மற்றும்

   e) HPB இன் "ஊட்டச்சத்து லேபிளிங் கையேடு (சிங்கப்பூர்)" இல் குறிப்பிடப்பட்டுள்ள மற்ற ஊட்டச்சத்துக்கள்.

24. பொருத்தமான மெட்ரிக் அலகுகள் பயன்படுத்தப்பட வேண்டும். ஆற்றலுக்கான அலகு கிலோகலோரிகள் மற்றும்/அல்லது கிலோஜூல்கள் ஆகும். அனைத்து கட்டாய ஊட்டச்சத்துக்கான அலகும் கிராம் ஆகும் . துணை ஊட்டச்சத்துக்களுக்கான பொருத்தமான அலகுகளுககு HPB இன் "ஊட்டச்சத்து முத்திரையிடல் கையேடு (சிங்கப்பூர்)" ஐப் பார்க்கவும்.

25. ஆற்றல் மதிப்பு மற்றும் ஊட்டச் சத்துகளின் அளவு ஆகியவை '100 மிலிக்கு' மற்றும்/அல்லது 'ஒரு பரிமாறலுக்கு” என்ற அடிப்படையில் குறிப்பிடப்பட வேண்டும். “ஒரு பரிமாறலுக்கு” பயன்படுத்தப்பட்டால், ஒரு பொட்டலத்திற்கான பரிமாறல்கள் அளவும் (மிலியில்) பரிமாறல்கள் எண்ணிக்கையும் NIP இல் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

26. ஆற்றலுக்கான மதிப்புகள் அருகிலுள்ள முழு எண்ணுக்கு முழுமையாக்கப்பட வேண்டும், அதே நேரத்தில் கட்டாய ஊட்டச்சத்துக்கான மதிப்புகள் அருகிலுள்ள ஒரு தசம இடத்திற்கு முழுமையாக்கப்பட வேண்டும்.

---

[7] தயாரிப்பில் கொழுப்பு இல்லை என்றால், "சீரமைக்கப்பட்ட கொழுப்பு" அளவை அறிவிக்க வேண்டிய கட்டாயம் இல்லை (*உணவு ஒழுங்குமுறைகள்*, ஒழுங்குமுறை 184C(1)(d) ஐப் பார்க்கவும்).

***உட்கொள்ளும் முன் ஒரு பானமாக திரவங்களுடன் மறுகட்டமைக்கப்பட வேண்டிய அல்லது நீர் சேர்த்து திரவமாக்கப்பட வேண்டிய மாவுப்பொருட்கள் அல்லது செறிவுணவுகளுக்கான தேவைகள்,***

27. இந்த தயாரிப்புகளுக்கு, NIP கண்டிப்பாக (விதிமுறைகள் 184C(1), 184C(4) மற்றும் 184C(5) ஆகியவற்றுடன் இணங்குவதுடன், பத்திகள் 20 முதல் 26 வரை விளக்கப்பட்டுள்ளது) தவிர

    a) '100 மிலிக்கு' மற்றும்/அல்லது 'ஒவ்வொரு பரிமாறலுக்கு' என்ற அடிப்படையில், பானத்தை எவ்வாறு தயாரிப்பது என்பது குறித்த உற்பத்தியாளரின் அறிவுறுத்தல்களின்படி பானங்கள் தயாரிக்கப்படுவதன் அடிப்படையில், ஆற்றல் மதிப்பு மற்றும் ஊட்டச்சத்து அளவுகளைக் குறிப்பிடவும்; மற்றும்

    b) பானத்தின் '100 மிலிக்கு" கிராம் அளவுகள் எனத் தகவல் வெளிப்படுத்தப்பட்டால், அந்த அறிவுறுத்தல்களின்படி பானங்கள் தயாரிக்கப்படுகின்றன என்பதன் அடிப்படையில் தகவல் உள்ளது என்று குறிப்பிடவும் (எ.கா. "முத்திரை வழிகாட்டலின் படி மறுகட்டமைக்கப்பட்டது").

28. இந்த தயாரிப்புகளுக்கு, பானத்தை எவ்வாறு தயாரிப்பது என்பது குறித்த உற்பத்தியாளரின் அறிவுறுத்தல்களுடன் அவற்றின் பொட்டலமும் முத்திரையிடப்பட்டிருக்க வேண்டும் .

29. தயாரிக்கப்பட்ட பானத்தில் உள்ள மதிப்புகளைக் குறிப்பிடுவதில் [பத்தி 27(b) ஐப் பார்க்கவும்],

    a) பானத்தை எவ்வாறு தயாரிப்பது என்பது குறித்த உற்பத்தியாளரின் அறிவுறுத்தல்களின்படி திரவங்களுடன் சேர்த்து நீராக்கிய பிறகு, மறுசீரமைக்கப்பட்ட பானத்தின் இறுதி அளவைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

    b) பானத்தை எவ்வாறு தயாரிப்பது என்பது குறித்த உற்பத்தியாளரின் அறிவுறுத்தல்கள் ஒன்றுக்கு மேற்பட்ட மறுசீரமைப்பு அறிவுறுத்தல்களைக் கொண்டிருந்தால் (உதாரணமாக, ஒரு மாவுப்பொருளை தண்ணீருடன் அல்லது பாலுடன் சேர்த்து நீராக்கலாம்), பானத்தின் தரத்தை கணக்கிடும் நோக்கத்திற்காக தண்ணீருடன் சேர்த்து நீராக்குவது பரிந்துரைக்கப்படுகிறது. அதன் பொட்டலத்தில் உள்ள Nutri-grade தரப்படுத்தல் மற்றும் ஊட்டச்சத்து தகவல்கள் தண்ணீருடன் மறுசீரமைப்பின் அடிப்படையில் இருக்க வேண்டும் என்று பரிந்துரைக்கப்படுகிறது, மேலும் NIP பற்றிய அறிவிக்கப்பட்ட தகவல்கள் தண்ணீரை மறுசீரமைக்கும் முறையின் அடிப்படையிலானவை என்பதை NIP குறிப்பிட வேண்டும். மேலும் தகவலுக்கு கொடுக்கப்பட்ட எடுத்துக்காட்டுகளைப் பார்க்கவும்.

    c) மறுசீரமைப்பு அறிவுறுத்தல் குறிப்பிட்ட வகை பாலுடன் (எ.கா. முழு கொழுப்பு, குறைந்த கொழுப்பு அல்லது கொழுப்பு நீக்கப்பட்ட பால்) திரவமாக்கப்பட வேண்டும் எனில், பாலில் உள்ள ஊட்டச்சத்து உள்ளடக்கம் கண்டிப்பாக சேர்க்கப்பட வேண்டும். பாலின் ஊட்டச்சத்து உள்ளடக்கத்தை தீர்மானிக்க நியாயமான அடிப்படையைப் பயன்படுத்த வேண்டும். எடுத்துக்காட்டாக, HPB' இன் உணவுக் கலவை அமைப்பு சிங்கப்பூரின் (FOCOS) அளவைகள் ஒவ்வொரு வகைப் பாலுக்கும் உரிய ஊட்டச்சத்து

மதிப்புகளைப் பெறப் பயன்படுத்தப்படலாம். குறிப்புக்கு, மறுசீரமைப்பிற்காக பொதுவாகப் பயன்படுத்தப்படும் பால்களின் ஊட்டச்சத்து மதிப்புகள் பின்வருமாறு (ஜூன் 2021 நிலவரப்படி):

i. ஆடையெடுக்கப்பட்ட சாதாரண பால்: 34.0 கிலோ கலோரி, 3.60 கிராம் புரதம், 4.80 கிராம் மாவுச்சத்து /மொத்த சர்க்கரை/லாக்டோஸ், 100 மிலிக்கு 0.1 கிராம் மொத்த கொழுப்பு மற்றும் 0.1 கிராம் நிறைவுற்ற கொழுப்பு.

ii. குறைந்த கொழுப்புள்ள சாதாரண பால்: 49.0 கிலோ கலோரி, 3.90 கிராம் புரதம், 5.90 கிராம் மாவுச்சத்து /மொத்த சர்க்கரை/லாக்டோஸ், 100 மிலிக்கு 1.20 கிராம் மொத்த கொழுப்பு மற்றும் 0.75 கிராம் நிறைவுற்ற கொழுப்பு

iii. முழு கொழுப்புள்ள சாதாரண பால்: 64.0 கிலோ கலோரி, 3.20 கிராம் புரதம், 4.50 கிராம் மாவுச்சத்து /மொத்த சர்க்கரை/லாக்டோஸ், 100 மிலிக்கு 3.70 கிராம் மொத்த கொழுப்பு மற்றும் 2.25 கிராம் நிறைவுற்ற கொழுப்பு

d) மறுசீரமைப்பு அறிவுறுத்தலில் பாலுடன் திரவமாக்கப்பட வேண்டும் மற்றும் பால் வகை குறிப்பிடப்படாவிட்டால், முழு கொழுப்புள்ள பால் இயல்புநிலையாகக் கருதப்படும்.

e) மறுசீரமைப்பு அறிவுறுத்தலில் தண்ணீர் அல்லது பால் தவிர வேறு ஒரு பொருளுடன் திரவமாக்கப்பட வேண்டும் எனில், அதே கொள்கைகள் இங்கும் பொருந்தும் பொருளின் ஊட்டச்சத்து உள்ளடக்கம் சேர்க்கப்பட வேண்டும். பொருளின் ஊட்டச்சத்து உள்ளடக்கத்தை தீர்மானிக்க ஒரு நியாயமான அடிப்படை பயன்படுத்தப்பட வேண்டும்.

30. விதிகள் 8A மற்றும் 184C(2) ஆகியவற்றில் உள்ள கட்டாயத் தேவைகளுக்கு மேலதிகமாக, பத்திகள் 27 மற்றும் 28 இல் மேலும் விளக்கப்பட்டுள்ளபடி , NIP ஆனது உற்பத்தியின் ஆற்றல் மதிப்பு மற்றும் விற்கப்படும் ஊட்டச்சத்துக்களின் அளவு ஆகியவற்றையும் குறிப்பிடலாம். இது 'ஒரு 100 கிராமுக்கு' அல்லது '100 மிலிக்கு' (திடமான வடிவில் விற்கப்பட்டால் 100 கிராமும், திரவ வடிவில் விற்கப்பட்டால் 100 மிலியும் பயன்படுத்தப்படும்), மற்றும்/ அல்லது ஒரு பரிமாறலுக்கு.

### *NIP-க்கான படிவம்*

31. NIP இன் உரை 1.5 மிமீ உயரத்திற்குக் குறையாத அச்சிடப்பட்ட எழுத்துக்களில் இருக்க வேண்டும்.

32. Nutri-grade பானங்களுக்கான NIP-க்கான நிலையான படிவத்திற்கு படம் 2 ஐப் பார்க்கவும். NIP இல் துணை ஊட்டச்சத்துக்களை அறிவிக்க விரும்பும் உற்பத்தியாளர்கள், உள்ளூர் இறக்குமதியாளர்கள், விநியோகஸ்தர்கள் அல்லது சில்லறை விற்பனையாளர்கள், துணை ஊட்டச்சத்துக்களை வழங்குவதற்கான வடிவம் மற்றும் வரிசை பற்றிய கூடுதல் தகவலுக்கு HPB இன் "ஊட்டச்சத்து முத்திரையிடுதலுக்கான கையேடு (சிங்கப்பூர்)" ஐப் பார்க்கவும்.

படம்2: NIPக்கான நிலையான வடிவம்

| ஊட்டச்சத்து தகவல் | | |
|---|---|---|
| ஒரு பொட்டலத்திற்க்கான பரிமாறல்கள் (இங்கே பரிமாறல்களின் எண்ணிக்கையைச் செருகவும்) * | | |
| பரிமாறல் அளவு: (இங்கே பரிமாறல்களின் எண்ணிக்கையைச் செருகவும்) * | | |
| | ஒரு பரிமாறலுக்கு* மற்றும்/அல்லது | 100 மிலிக்கு*** |
| ஆற்றல் | கிலோகலோரி, கிலோஜுல் அல்லது இரண்டும் | கிலோகலோரி, கிலோஜுல் அல்லது இரண்டும் |
| புரதம் | கிராம் | கிராம் |
| கொழுப்பு | கிராம் | கிராம் |
| செறிவுணவு கொழுப்பு | கிராம் | கிராம் |
| மாவுச்சத்து | கிராம் | கிராம் |
| மொத்த சர்க்கரை | கிராம் | கிராம் |
| லாக்டோஸ் ** | கிராம் | கிராம் |
| கேலக்டோஸ் ** | கிராம் | கிராம் |
| (இங்கே ஊட்டச்சத்து உரிமைகோரல்கள் செய்யப்பட்ட ஊட்டச்சத்துக்கள் அல்லது அறிவிக்கப்பட வேண்டிய வேறு ஏதேனும் ஊட்டச்சத்துக்களைச் செருகவும்) | மைக்ரோகிராம், மில்லிகிராம், கிராம் அல்லது பொருத்தமான பிற அளவீட்டு அலகுகள் | மைக்ரோகிராம், மில்லிகிராம், கிராம் அல்லது பொருத்தமான பிற அளவீட்டு அலகுகள் |

* ஊட்டச்சத்துக்கள் ஒரு பரிமாறல் அடிப்படையில் அறிவிக்கப்பட்டால் மட்டுமே பொருந்தும்

** விரும்பினால் ஆனால் லாக்டோஸ்/கேலக்டோஸ் கொண்ட பானங்களுக்கு வலுவாக ஊக்குவிக்கப்படுகிறது

*** மாவுப்பொருட்கள் அல்லது செறிவுகளுக்கு, மறுகட்டமைக்க அல்லது திரவங்களுடன் நீராக்க வேண்டிய, NIP ஆனது ஆற்றல் மதிப்பு மற்றும் ஊட்டச்சத்துக்களின் அளவை 100 மிலி பானத்திற்கு கூறினால், பானத்தை எவ்வாறு தயாரிப்பது என்பது குறித்த உற்பத்தியாளரின் அறிவுறுத்தல்களின்படி (எ.கா. "முத்திரை வழிகாட்டுதலின்படி மறுசீரமைக்கப்பட்டது") இந்த நெடுவரிசையின் கீழ் உள்ள மதிப்புகள் பானத்தின் அடிப்படையில் இருக்கும் என்று NIP இல் ஒரு அறிக்கையும் இருக்கும். விற்கப்படும் பொருளில் உள்ள ஆற்றல் மதிப்பு மற்றும் ஊட்டச்சத்துக்களின் அளவு பற்றிய கூடுதல் தகவல்கள் சேர்க்கப்படலாம்.

33. 100 செமீ² க்கும் குறைவான பரப்பளவு கொண்ட முன் பொட்டலமாக்கப்பட்ட பானங்கள், மொத்த சர்க்கரை மற்றும் செறிவூட்டப்பட்ட கொழுப்பின் அளவைக் கொண்ட முத்திரைகளில், NIP இருக்க வேண்டிய அவசியமில்லை. எவ்வாறாயினும், தொடர்புடைய தரப்பினர் (அதாவது, ஒழுங்குமுறை 184B(1) இல் குறிப்பிடப்பட்டுள்ள உற்பத்தியாளர்கள், உள்ளூர் இறக்குமதியாளர்கள், விநியோகஸ்தர்கள்) ஒரு NIP இல் உள்ள தகவலுடன் அத்தகைய ஒரு பானத்தை முத்திரையிட விரும்பினால், பொட்டலத்தால் NIP க்கு இடமளிக்க முடியவில்லை என்றால், படம் 3 இல் காட்டப்பட்டுள்ளபடி தகவல் வழங்குவதை பரிசீலிக்கலாம்.

<u>படம் 3: ஒரு 100செமீ² க்கும் குறைவான மொத்த பரப்பளவுடைய தயாரிப்புகளுக்கான NIP தகவலை வழங்குதல்</u>

| |
|---|
| **ஊட்டச்சத்து தகவல்.** பொட்டலத்திற்கான பரிமாறல்கள்: (இங்கே பரிமாறல்களின் எண்ணிக்கையைச் செருகவும்)*, பரிமாறல் அளவு: (இங்கே பரிமாறல் அளவைச் செருகவும்)*<br>ஒரு பரிமாறல் மற்றும்/அல்லது 100மிலி-க்கான அளவு ***: ஆற்றல் கிலோ கலோரி அல்லது கிலோ ஜூல் அல்லது இரண்டும், புரதம் கிராம், கொழுப்பு கிராம், செறிவூட்டப்பட்ட கொழுப்பு கிராம், கார்போஹைட்ரேட் கிராம், மொத்த சர்க்கரை கிராம், லாக்டோஸ் ** கிராம், கேலக்டோஸ் ** கிராம், (ஊட்டச்சத்து உரிமைகோரல்கள் செய்யப்பட்ட ஊட்டச்சத்துக்கள் அல்லது அறிவிக்கப்பட வேண்டிய வேறு ஏதேனும் பிற ஊட்டச்சத்துக்களை இங்கே செருகவும்). |

* ஊட்டச்சத்துக்கள் ஒரு பரிமாறல் அடிப்படையில் அறிவிக்கப்பட்டால் மட்டுமே பொருந்தும்

** விரும்பினால் ஆனால் லாக்டோஸ்/கேலக்டோஸ் கொண்ட பானங்களுக்கு வலுவாக ஊக்குவிக்கப்படுகிறது

*** மாவுப்பொருட்கள் அல்லது செறிவுகளுக்கு, மறுகட்டமைக்க அல்லது திரவங்களுடன் நீராக்க வேண்டும், NIP ஆனது ஆற்றல் மதிப்பு மற்றும் ஊட்டச்சத்துக்களின் அளவை 100 மிலி பானத்திற்கு கூறினால், பானத்தை எவ்வாறு தயாரிப்பது என்பது குறித்த உற்பத்தியாளரின் அறிவுறுத்தல்களின்படி (எ.கா. "லேபிள் திசைகளின்படி மறுசீரமைக்கப்பட்டது") இந்த நெடுவரிசையின் கீழ் உள்ள மதிப்புகள் பானத்தின் அடிப்படையில் இருக்கும் என்று NIP இல் ஒரு அறிக்கையும் இருக்கும். விற்கப்படும் பொருளில் உள்ள ஆற்றல் மதிப்பு மற்றும் ஊட்டச்சத்துக்களின் அளவு பற்றிய கூடுதல் தகவல்கள் சேர்க்கப்படலாம்.

## பிரிவு 4.3: பகுப்பாய்வு முறைகள் மற்றும் இணக்கத் தேவைகள்

34. NIP இல் அறிவிக்கப்பட்ட மதிப்புகள் சராசரி மதிப்புகளாக இருக்கலாம், அதாவது கொடுக்கப்பட்ட பானத்தில் உள்ள ஆற்றல் மதிப்பு மற்றும் ஊட்டச்சத்துக்களின் அளவை சிறப்பாகக் குறிக்கும் மதிப்பு மற்றும் பருவகால மாறுபாடு, நுகர்வு முறைகள் மற்றும் உண்மையான மதிப்பை மாற்றும் பிற காரணிகளுக்கான மதிப்புகள்.

35. NIP இல் உள்ள மதிப்புகள் கீழே பட்டியலிடப்பட்டுள்ள முறைகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படலாம். NIP இல் உள்ள மதிப்புகளைத் தீர்மானிக்கப் பயன்படுத்தப்படும் முறையைப் பொருட்படுத்தாமல், NIP இல் உள்ள தகவலின் துல்லியத்தைக் கண்காணிக்க மாதிரிகளைச் சேகரிப்பதன் மூலம் தணிக்கைச் சோதனைகள் நடத்தப்படும். மேலும் தகவலுக்கு பத்தி 39 ஐ பார்க்கவும்.

   a) அதிகாரப்பூர்வ பகுப்பாய்வு வேதியியலாளர்கள் சங்கம் (AOAC) மற்றும்/அல்லது AOAC அதிகாரப்பூர்வ முறைகளுக்கு[8] சமமானதாகக் காட்டப்படும் மாற்று முறைகளைப் பயன்படுத்திய பானத்தின் இரசாயன பகுப்பாய்வு, இது பரிந்துரைக்கப்பட்ட பகுப்பாய்வு முறையாகும்;

   b) பயன்படுத்தப்படும் பொருட்களின் அறியப்பட்ட அல்லது உண்மையான மதிப்புகளிலிருந்து கணக்கீடுகள்; அல்லது

   c) பொதுவாக நிறுவப்பட்ட மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளிலிருந்து கணக்கீடுகள்.

54. **மாறுபாடுகள்.** Nutri-grade குறியானது கிடைமட்ட மற்றும் செங்குத்து வகைகளில் கிடைக்கிறது, ஒவ்வொரு நான்கு தரங்களுக்கும் ("A", "B", "C" மற்றும் "D") முறையே (தயவுசெய்து படம் 5 ஐப் பார்க்கவும்). கிடைமட்ட மாறுபாடு இயல்புநிலையாகப் பயன்படுத்தப்பட வேண்டும் மற்றும் கிடைமட்ட மாறுபாட்டின் பயன்பாடு சாத்தியமில்லாத போது மட்டுமே செங்குத்து மாறுபாடு பயன்படுத்தப்படலாம். அத்தகைய நிகழ்முறைகளின் எடுத்துக்காட்டுகள்:

    a) கிடைமட்ட மாறுபாட்டைக் காட்ட, போதுமான தெளிவான கிடைமட்ட இடம் இல்லை;

    b) பொட்டலத்தின் வடிவமைப்பின் பின்னணியில் நிறைய விசயங்கள் அச்சிடபட்டுள்ளமையால், கிடைமட்ட மாறுபாட்டுடன் ஒப்பிடும்போது செங்குத்து மாறுபாடு மிகவும் தெளிவாக இருக்கும்.

55. **அளவு**. Nutri-grade குறி பின்வரும் குறைந்தபட்ச அளவுத் தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டும்:

a) குறியின் நீண்ட பக்கமானது துணை பாரா (b) க்கு உட்பட்டு, குறைந்தபட்சம் பொட்டலத்தின் முகப்பு (FOP) பகுதியின் அகலம் மற்றும் உயரத்தின் கூட்டுத்தொகை வகுத்தல் 7 ஆக இருக்க வேண்டும் (கீழே உள்ள சமன்பாட்டில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது); துணை பாரா (b) இன் நோக்கத்திற்காக

$$\text{Minimum length of long side of mark} = \frac{\text{width of FOP area} + \text{height of FOP area}}{7}$$

b) துணை பாரா (a) இன் நோக்கத்திற்காக, FOP பகுதியானது:

i. Nutri-grade பானத்தின் பெயர் மற்றும் நிறுவனஅடையாளம் (ஒரு நிறுவனஅடையாளம் இருந்தால்) தோன்றும் பொட்டலத்தின் முகப்பு பகுதி மற்றும் அது வருங்கால வாங்குபவரின் முதன்மை பார்வையில் இருக்கும்; மற்றும்

ii. அச்சிடப்பட்ட பகுதி, தயாரிப்பு ஸ்லீவ் அல்லது முத்திரை மூலம் பொட்டலத்தில் வரையறுக்கப்படுகிறது. உருளைப் பொதிகளில் (எ.கா. பாட்டில்கள், கேன்கள்), அகலமானது பொட்டலத்தின் சுற்றளவு வகுத்தல் மூன்று என வரையறுக்கப்படுகிறது;

c) எல்லா சூழ்நிலைகளிலும், குறியின் நீண்ட பக்கமானது குறைந்தபட்சம் 19.8 மிமீ இருக்க வேண்டும், மற்றும் குறுகிய பக்கமானது குறைந்தபட்சம் 8.5 மிமீ இருக்க வேண்டும்.

படம் 5: Nutri-grade குறியின் மாறுபாடுகள்




குறிப்பு: பானத்தின் சர்க்கரை உள்ளடக்கத்தை துல்லியமாக பிரதிபலிக்க, சர்க்கரை அளவிற்கான எண் மதிப்பு திருத்தப்பட வேண்டும்.

## பிரிவு 6.3 தயாரிப்பு தொகுப்புகளுக்கான விண்ணப்பத் தேவைகள்

56. Nutri-grade குறியானது தயாரிப்பு தொகுப்பின் FOP மேற்பரப்பில் பயன்படுத்தப்பட வேண்டும் [தயவுசெய்து பத்தி 55(b) ஐப் பார்க்கவும்].

    a) FOP மேற்பரப்பின் வரையறையை நிறைவேற்றும் பல மேற்பரப்புகள் இருந்தால் (எ.கா. முன் மற்றும் பின் மேற்பரப்புகள் இரண்டும் ஒரே மாதிரியாக இருக்கும் செவ்வக அட்டைப்பெட்டி), குறைந்தபட்சம் ஒரு மேற்பரப்பிலாவது Nutri-grade குறியைப் பயன்படுத்த வேண்டும் மற்றும் Nutri-grade முத்திரையைக் கொண்ட மேற்பரப்பு, விற்பனை செய்யும் இடத்தில் வருங்கால வாங்குபவர்களை இயல்பாக எதிர்கொள்ள வேண்டும். சந்தேகத்தைத் தவிர்க்க, உற்பத்தியாளர்கள், உள்ளூர் இறக்குமதியாளர்கள் மற்றும் விநியோகஸ்தர்கள், FOP மேற்பரப்பின் வரையறையைப் பூர்த்தி செய்யும் அனைத்துப் பரப்புகளிலும் முத்திரையைப் பயன்படுத்த ஊக்குவிக்கப்படுகிறார்கள். `

57. இயல்பாக, Nutri-grade குறி அச்சிடப்பட்ட பகுதி, தயாரிப்பு ஸ்லீவ் அல்லது பொட்டலத்தின் முத்திரையில் இருக்க வேண்டும். இது சாத்தியமில்லை என்றால், அது பொட்டலத்தின் முன் முகத்தில் வேறு இடத்தில் இருக்கலாம்.

58. Nutri-grade குறியானது பானப் பொதியில் ஒரு முக்கிய மற்றும் வெளிப்படையான நிலையில் குறிக்கப்பட்டிருக்க வேண்டும் அல்லது பாதுகாப்பாக இணைக்கப்பட வேண்டும் மற்றும் தெளிவாகப் படிக்கக்கூடியதாக இருக்க வேண்டும். பிசின் ஒட்டும் முத்திரைகள் மூலம் இதை அடையலாம்.

    a) "பாதுகாப்பாக இணைக்கப்பட்டுள்ளது" என்பதன் மூலம், Nutri-grade குறியைக் கொண்ட முத்திரை எளிதில் அகற்றக் கூடியதாக இருக்கக்கூடாது மற்றும் பொட்டலத்தின் எதிர்பார்க்கப்படும் காலாவதியாகும் தேதி வரை பொட்டலத்துடன் இணைக்கப்பட்டிருக்க வாய்ப்புள்ளது.

    b) தெளிவாகப் படிக்கக்கூடியதாக இருக்க, Nutri-grade குறி நீர்-எதிர்ப்புத் திறன் கொண்டதாக இருக்க வேண்டும் மற்றும் சுருக்கம்/கசிவு ஏற்படும் போது மை அழியக் கூடாது.

### பல்பொருள் பொட்டலங்*களுக்கான விண்ணப்பத் தேவைகள் ("*பல்பொருள் பொட்டலங்*களின்" வரையறைக்கு பத்தி 16ஐப் பார்க்கவும்)*

59. பல்பொருள் பொட்டலங்களுக்குள் உள்ள ஒவ்வொரு வகையான Nutri-grade பானங்களுக்கும் Nutri-grade குறி முத்திரையிடப்பட வேண்டும். குறி பின்வருவனவற்றில் குறிக்கப்பட்டிருக்கலாம் அல்லது பாதுகாப்பாக இணைக்கப்படலாம்:

    a) பல்பொருள் பொட்டலத்தின் வெளிப்புற பொதியின் FOP மேற்பரப்பு, முன்தொகுக்கப்பட்ட Nutri-grade பானத்தின் அலகுகள் அல்ல, பல்பொருள் பொட்டலத்தின் வெளிப்புற பொதியின் தொகுப்பில் உள்ள ஒவ்வொரு அலகும் தனித்தனியாக விற்கப்படக் கூடாது என்ற அறிக்கை (உதாரணத்திற்கு. "தனியாக விற்கப்படக்கூடாது");

    b) பல்பொருள் பொட்டலத்தில் உள்ள முன்பே பொட்டலமிடப்பட்ட Nutri-grade பானத்தின் ஒவ்வொரு அலகின் FOP மேற்பரப்பு, மற்றும் பல்பொருள் பொட்டலத்தின் வெளிப்புற பொதி அல்ல, பல்பொருள் பொட்டலத்தின் வெளிப்புற பொதி முற்றிலும் வெளிப்படையானதாக இருந்தால்

(உதாரணத்திற்கு. தெளிவான பிளாஸ்டிக் ஸ்லீவ்) மற்றும் பல்பொருள் பொட்டலத்துள் உள்ள ஒவ்வொரு யூனிட்டிலும் Nutri-grade முத்திரை வெளிப்புற பொதியின் மூலம் வருங்கால வாங்குபவர்களுக்கு தெளிவாகத் தெரியவேண்டும்; அல்லது

184D(4) விதியை நிறைவேற்ற, தொழில்துறையானது Nutri-grade முத்திரையை ஒவ்வொரு தனித்தனி பானத்தின் முன்பகுதி மேற்பரப்பு மற்று`ம் மல்டிபேக்கின் வெளிப்புற பேக்கேஜிங் ஆகிய இரண்டிலும் குறிக்கலாம் அல்லது பாதுகாப்பாக இணைக்கலாம்.

இந்த தேவைகள் கீழே உள்ள அட்டவணை 9 இல் சுருக்கமாக கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 9: பல்பொருள் பொட்டலங்<u>களுக்கான NIP(கள்) மற்றும் Nutri-grade முத்திரை(கள்) லேபிளிங்கிற்கான குறைந்தபட்ச தேவைகள்</u>

| | | | |
|---|---|---|---|
| | | பல்பொருள் பொட்டலத்தின் வெளிப்புற பேக்கேஜிங் முற்றிலும் வெளிப்படையானதா, அதாவது வெளிப்படையான பேக்கேஜிங்கில் உள்ள ஒவ்வொரு அலகின் FOP முத்திரையிடப்பட்டு Nutri-grade முத்திரை, வெளிப்புற பேக்கேஜிங் மூலம் தெளிவாகத் தெரிகிறதா? | |
| | | ஆம்<br>*(உதாரணத்திற்கு ஆர்ட்ஒர்க் வடிவமைப்புகள் இல்லாத தெளிவான பிளாஸ்டிக் ஸ்லீவ், ஆறு 1.5 லிட்டர் பாட்டில்களில் சுற்றப்பட்டது)* | இல்லை<br>*(உதாரணத்திற்கு 16 கேன்கள் பானங்கள் உள்ள ஒளிபுகா அட்டைப் பெட்டி)* |
| தயாரிப்புகள் பல்பொருள் பொட்டல வடிவத்தில் மட்டும் விற்பனை செய்யும் நோக்கமுடையவா மற்றும் வெளிப்புற பேக்கேஜிங்கில் மல்டிபேக்கில் உள்ள யூனிட்கள் தனித்தனியாக விற்கப்படக்கூடாது என்ற அறிக்கை அல்லது | ஆம் | **NIP (கள்) மற்றும் Nutri-grade முத்திரை(களை) இவற்றில் முத்திரையிடுவது போதுமானது:**<br>• தனிப்பட்ட அலகுகளில் மட்டும்; அல்லது<br>• பல்பொருள் பொட்டலத்தின் வெளிப்புற பேக்கேஜிங்கில் மட்டும். | **Nutri-grade முத்திரை(களை) இவற்றில் லேபிளிடுவது போதுமானது:**<br>• பல்பொருள் பொட்டலத்தின் வெளிப்புற பேக்கேஜிங்கில் மட்டும்.<br>(குறிப்பு: தனிப்பட்ட அலகுகளில் மட்டும் முத்திரையிடுவது போதாது) |

பொறுப்புத் துறப்பு: இந்த ஆவணம் ஒரு வழிகாட்டியாக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் மற்றும் ஒரு சட்ட ஆலோசனையின் ஆதாரமாக நம்பப்படக்கூடாது. பானங்களுக்கான முத்திரை மற்றும் விளம்பரத் தேவைகளின் விரிவான விவரக்குறிப்புகளுக்கு, *உணவு விதிமுறைகளைப்* பார்க்கவும்

| | | | |
|---|---|---|---|
| அதுபோன்ற விளைவுக்கான அறிக்கை (உதாரணத்துக்கு. "தனியாக விற்கப்படக்கூடாது") உள்ளதா? | | | NIP(**களை**) இவற்றில் முத்திரையிடுவது போதுமானது:<br>• தனிப்பட்ட அலகுகள் மட்டும்; அல்லது<br>• மல்டிபேக்கின் வெளிப்புற பேக்கேஜிங்கில் மட்டும். |
| | இல்லை | NIP (**கள்**) **மற்றும்** Nutri-grade முத்திரை(**களை**) **இதில்** முத்திரையிடுவது **போதுமானது:**<br>• தனிப்பட்ட அலகுகளில் மட்டும்.<br><br>(குறிப்பு: பல் பொருள் பொட்டலத்தில் மட்டும் முத்திரையிடுவது போதாது) | Nutri-grade முத்திரை(**கள்**) **தனித்தனி அலகுகள் மற்றும் மல்டிபேக்கின் வெளிப்புற பேக்கேஜிங் ஆகிய இரண்டிலும் குறிக்கப்பட வேண்டும்.**<br>(குறிப்பு: முத்திரையிடுவது தனிப்பட்ட அலகுகளில் மட்டும் அல்லது பல் பொருள் பொட்டலத்தின் வெளிப்புற பேக்கேஜிங்கில் மட்டும் போதாது)<br><br>NIP (**களை**) **இதில்** முத்திரையிடுவது **போதுமானது:**<br>• தனிப்பட்ட அலகுகளில் மட்டும்.<br><br>(குறிப்பு: பல் பொருள் பொட்டலத்தில் மட்டும் முத்திரையிடுவது போதாது) |

## பிரிவு 6.4 தயாரிப்பு தொகுப்புகளைத் தவிர வேறு அமைப்புகளுக்கான பயன்பாட்டுத் தேவைகள்

60. தயாரிப்பு தொகுப்புகளின் FOP மேற்பரப்பில் பயன்படுத்தப்படுவதைத் தவிர, Nutri-grade குறியின் படமும் காட்டப்பட வேண்டும், எனவே Nutri-grade பானத்தின் வருங்கால வாங்குபவர் படத்தைப் பார்க்க முடியும் (அதாவது Nutri-grade பானம் விற்கப்படுவதற்கு முன்பு). இது சிங்கப்பூரில் சில்லறை விற்பனைக்குக் கிடைக்கும் "C" அல்லது "D" தரப்படுத்தப்பட்ட Nutri-grade பானங்களுக்கு கட்டாயமாகும், "A" அல்லது "B" தரப்படுத்தப்பட்ட Nutri-grade பானங்களுக்கு தன்னார்வமாகும்.

61. பல்வேறு அமைப்புகளில் உள்ள முக்கிய தேவைகள் அட்டவணை 10 இல் சுருக்கமாக உள்ளன.

அட்டவணை 10. தயாரிப்புத் தொகுப்பு தவிர, பிறவற்றில் Nutri-grade அடையாளத்தின் ஒரு படத்தைக் காண்பிக்க வேண்டிய தேவைகள்

| **அமைத்தல்** | **கூடுதல்** முத்திரையிடல் **தேவைகள்:**<br>*Nutri-grade குறியின் படம் கண்டிப்பாக...* | **கிராஃபிக் விவரக்குறிப்புகள்** |
|---|---|---|
| பானம் இணையம் வழி விற்கப்படும் இடங்களில் (உதாரணத்திற்கு இணைய பல்பொருள் அங்காடிகள்) | • பானத்தின் இணைய படம் அல்லது உரைப் பட்டியலுக்கு அடுத்ததாகவோ அல்லது நேரடித் தொடர்பிலோ தெளிவாகக் காட்டப்பட வேண்டும், ஒரு வருங்கால வாங்குபவர் பார்க்கும் அதே காட்சியில் (உதாரணத்திற்கு தயாரிப்பு பட்டியல்கள், தேடல் முடிவுகள் மற்றும் கட்டணப் பக்கங்களில்). | கிராஃபிக் மற்றும் பயன்பாட்டு விவரக்குறிப்புகள் பற்றிய முழு வழிகாட்டுதலுக்கு, Nutri-grade அடையாளத்தின் கிராஃபிக் பயன்பாடுகளுக்கான பயன்பாட்டு வழிகாட்டி" ஐப் பார்க்கவும். |
| பானமானது ஒரு தானியங்கி விற்பனை (வெண்டிங்) இயந்திரத்தில் விற்கப்படும் இடத்தில் | • சாளரம் தெளிவாக இருந்தால், விற்பனை இயந்திரத்தின் ஜன்னல் வழியாக Nutri-grade பானத்தின் தொகுப்பில் தெளிவாகத் தெரிய வேண்டும்; அல்லது<br>• படம் அல்லது உரைப் பட்டியல் அல்லது பானத்தின் விலைக் குறிச்சொல்லுக்கு அடுத்ததாகவோ அல்லது நேரடியாகவோ தெளிவாகக் காட்டப்பட வேண்டும்.<br>• பிசின் முத்திரைகள் பயன்படுத்தப்பட்டால், எளிதில் அகற்ற முடியாதபடி. | |
| வாங்குபவர் எதிர்கொள்ளும் தானியங்கு பான விநியோகிப்பானிடமிருந்து பானம் விற்கப்படும் இடத்தில் | • தானியங்கு பான விநியோகிப்பானில் அல்லது அதன் அருகில் தெளிவாகக் காட்டும்படி வருங்கால வாங்குபவருக்குத் தெரியும் வகையில்;<br>• தானியங்கு பான விநியோகிப்பானில் ஒன்றுக்கு மேற்பட்ட பானங்கள் இருந்தால், Nutri-grade பானத்தின் படம் அல்லது | |

| | | |
|---|---|---|
| | உரை பட்டியலுக்கு அடுத்ததாகவோ அல்லது நேரடியாகவோ காட்டும்படி; மற்றும்<br>• பிசின் முத்திரைகள் பயன்படுத்தப்பட்டால், எளிதில் அகற்ற முடியாதபடி | |

**வரையறை**

**"வாங்குபவர் எதிர்கொள்ளும் தானியங்கு பான விநியோகம்"** என்பது எந்த பானத்தை விநியோகிக்கலாம் மற்றும் வைக்கலாம் என்பதன் ஒரு படம் அல்லது உரைப் பட்டியலைக் காட்டும் ஒரு தானியங்கு பான விநியோகிப்பான் (ABD) —

(a) ஒரு வாங்குபவருக்கு படத்தை அல்லது உரைப் பட்டியலைப் பார்க்க அனுமதிக்கும் விதத்தில் (உதாரணத்திற்கு துரித உணவு உணவகங்களில் பொதுவாகக் காணப்படும் ABDகள்) ஒரு விற்பனைக் கவுண்டரில் அல்லது அதன் பின்னால்;

(b) படம் அல்லது உரைப் பட்டியலின் அடிப்படையில், ஒரு வருங்கால வாங்குபவருக்கு தனது விருப்பப்படி ஒரு பானத்தை வழங்க அனுமதிப்பது (உதாரணத்திற்கு பொதுவாக விற்பனை கவுண்டரில் இருந்து விலகி, வசதியான கடைகள் அல்லது துரித உணவு உணவகங்களில் பயன்படுத்தப்படுகின்ற ABDகள்)

(c) படம் அல்லது உரை பட்டியலை வருங்கால வாங்குபவரை பார்க்க அனுமதிக்கும் வேறு எந்த வகையிலும்.

62. சந்தேகத்தைத் தவிர்ப்பதற்காக, உணவு மற்றும் உணவு வழங்கும் நிறுவனங்களுக்கு,

a) தற்சமயம் பட்டியல்களில், நேரிடை விற்பனை இடங்களில் (உதாரணத்திற்கு உணவு விநியோக தளங்கள்) அல்லது வாங்குபவர் எதிர்கொள்ளாத தானியங்கு பானங்கள் வழங்கும் சாதனங்களில் Nutri-grade குறியின் படத்தைக் காட்ட வேண்டிய அவசியம் இல்லை. இந்த தேவைகள் எதிர்காலத்தில் அறிமுகப்படுத்தப்படலாம்;

b) விற்பனை இயந்திரங்கள் மற்றும் வாங்குபவர் எதிர்கொள்ளும் தானியங்கு பான விநியோகிகள் மூலம் விற்கப்படும் Nutri-grade பானங்களுக்கு, Nutri-grade அடையாளத்தைக் காண்பிப்பது இன்னும் தேவைப்படுகிறது.

## அடிக்கடிகேட்கப்படும் கேள்விகள்

**A. முன்தொகுக்கப்பட்ட Nutri-grade பானங்களின் பேக்கேஜ்களில் Nutri-grade அடையாளத்தை லேபிளிடப்படுவதற்கு யார் பொறுப்பு?**

- *உணவு விதிமுறைகளின்படி*, ஒரு Nutri-grade பானம் தரப்படுத்தப்பட்டிருப்பதையும், Nutri-grade தரம் "C" அல்லது "D" என்று இருந்தால், அதன் பேக்கேஜ் Nutri-grade முத்திரையுடன் முத்திரையிடப்படுவதையும், Nutri-grade முத்திரை துல்லியமான தகவல்களைக் கொண்டுள்ளதையும் பின்வரும் நபர்கள் உறுதிப்படுத்த வேண்டும். அதாவது,
  - i. ஒரு Nutri-grade பானம் சிங்கப்பூர் சில்லறை விற்பனைக்காக சிங்கப்பூரிலேயே தயாரிக்கப்பட்டால், அதன் உற்பத்தியாளர்;
  - ii. ஒரு Nutri-grade பானம் சிங்கப்பூரில் சில்லறை விற்பனைக்கு இறக்குமதி செய்யப்பட்டால், அதன் அதன் உள்ளூர் இறக்குமதியாளர்; அல்லது
  - iii. பிற சந்தர்ப்பத்தில் (எ.கா. ஒரு உள்ளூர் விநியோகஸ்தர் Nutri-grade பானங்களை உற்பத்தியாளர்கள் அல்லது உள்ளூர் இறக்குமதியாளர்களிடமிருந்து வாங்கி, தயாரிப்பை அவரின் சொந்த பிராண்ட் பெயரின் கீழ் லேபிளிட்டால்), அதன் விநியோகஸ்தர்.
- உற்பத்தியாளர், உள்ளூர் இறக்குமதியாளர் மற்றும் விநியோகஸ்தர் ஆகியோர் NIP இன் துல்லியமான முத்திரையிடப்படுவதை உறுதி செய்யும் சட்டப் பொறுப்பைக் கொண்டிருக்கும் போது, அவர்கள் முத்திரையிட செய்ய ஒரு மூன்றாம் தரப்பினரை ஈடுபடுத்தலாம்.

**B. இணையம் வழி விற்கப்படும் Nutri-grade பானங்களுக்கான Nutri-grade முத்திரையின் காட்சிப்படுத்தலுக்கு யார் பொறுப்பு?**

- Nutri-grade பானத்தை சில்லறை விற்பனை மூலம் இணையம் வழி விற்கும் நபர், Nutri-grade பானத்தின் தரம் “C” அல்லது “D” என்றால், ஒரு வாங்குபவர் Nutri-grade முத்திரையின் படத்தைப் பார்க்கும் வகையில் அது காட்டப்படுவதை உறுதிசெய்ய வேண்டும்.
- இணைய தள உரிமையாளர்கள், இந்த காட்சிக் கடமைகளுக்கு இணங்குவதை ஆதரிப்பதற்கு வலுவாக ஊக்குவிக்கப்படுகிறார்கள், இணைய இயங்குதளம் Nutri-grade அடையாளத்தைக் காட்ட அனுமதிக்கிறது என்பதை உறுதிப்படுத்துவது உட்பட ஆனால் மட்டுப்படுத்தப்படவில்லை. தங்கள் இணைய இயங்குதளம் மூலம் Nutri-grade பானத்தை விற்கும் நபர்கள் இந்தக் காட்சிக் கடமைகளைப் பற்றி அறிந்திருக்கிறார்கள், மேலும் இணங்காத உள்ளடக்கத்தை அகற்ற அதிகாரிகளுடன் இணைந்து பணியாற்றவும் செய்கிறார்கள்.

**C. தானியங்கி இயந்திரம் மூலம் சில்லறை விற்பனையில் விற்கப்படும் Nutri-grade பானங்களுக்கான Nutri-grade அடையாளத்தைக் காட்டுவதற்கு யார் பொறுப்பு?**

- Nutri-grade பானத்தின் தரம் “C” அல்லது “D" ஆக இருந்தால், ஒரு Nutri-grade பானத்தை தானியங்கி இயந்திரம் மூலம் சில்லறை விற்பனையில் விற்பனை செய்யும் ஒரு நபர், வாங்குபவர் Nutri-grade முத்திரையின் படத்தைப் பார்க்கும் வகையில் காட்டப்படுவதை உறுதிசெய்ய வேண்டும்.

- இந்த நபரின் பொறுப்பு:
    i. தானியங்கி விற்பனை இயந்திரத்தின் சாளரம் தெளிவாக இருந்தால், (a) அவற்றின் FOP மேற்பரப்பில் Nutri-grade அடையாளத்தைக் காட்டும் பொருட்கள் மட்டுமே வாங்கப்படுவதை உறுதி செய்தல்; மற்றும் (b) வருங்கால வாங்குபவர்களுக்கு அதன் FOP மேற்பரப்பில் உள்ள Nutri-grade குறியின் படம், சாளரத்தின் மூலம் தெளிவாகத் தெரியும் வகையில் பானங்கள் காட்டப்படுவதை உறுதி செய்தல்; அல்லது
    ii. தானியங்கி விற்பனை இயந்திரத்தின் சாளரம் தெளிவாக இல்லை என்றால், Nutri-grade பானத்தின் படம் அல்லது உரைப் பட்டியல் அல்லது விலைக் குறிச்சொல்லில் Nutri-grade படம் காட்டப்படுவதை உறுதிசெய்யவும்.
- தேவைப்படும் பட்சத்தில், தானியங்கி விற்பனை இயந்திரத்தில் இருந்து விற்கப்படும் Nutri-grade பானங்களின் உற்பத்தியாளர், உள்ளூர் இறக்குமதியாளர் அல்லது விநியோகஸ்தர் (பொருந்தும் இடங்களில்) உடன் தொடர்புகொள்வது உட்பட, ஆனால் அவை மட்டும் அல்லாமல், காட்டப்படும் தகவல் துல்லியமானது என்பதை இந்த நபர் உறுதிசெய்ய வேண்டும்.

**D. ஒரு வாங்குபவர்-எதிர்கொள்ளும் தானியங்கு பான விநியோகிப்பான் மூலம் விற்கப்படும் Nutri-grade பானங்களுக்கான Nutri-grade அடையாளத்தைக் காட்டுவதற்கு யார் பொறுப்பு?**

- ஒரு வாங்குபவர்-எதிர்கொள்ளும் தானியங்கு பான விநியோகிப்பான் மூலம் சில்லறை விற்பனையில் Nutri-grade பானத்தை விற்கும் ஒரு நபர், Nutri-grade பானத்தின் தரம் "C" அல்லது "D" ஆக இருந்தால், வாங்குபவர் Nutri-grade முத்திரையின் படத்தைப் பார்க்கும் வகையில் காட்டப்படுவதை உறுதிசெய்ய வேண்டும்.
- இந்த நபரின் பொறுப்பு:
    - Nutri-grade படம் தானியங்கு பான விநியோகியில் அல்லது அதற்கு அருகில் தெளிவாகக் காட்டப்படுவதை உறுதி செய்தல்; மற்றும்
    - ஒன்றுக்கு மேற்பட்ட பானங்கள் தானியங்கு பானங்கள் தானியங்கு பான விநியோகியில் கிடைத்தால், படம் அல்லது பானத்தின் உரை பட்டியலுக்கு அருகிலோ அல்லது நேரடியாகவோ காட்டப்படுவதை உறுதிசெய்யவும்.
- தேவைப்படும் பட்சத்தில், தானியங்கி விற்பனை இயந்திரத்தில் இருந்து விற்கப்படும் Nutri-grade பானங்களின் உற்பத்தியாளர், உள்ளூர் இறக்குமதியாளர் அல்லது விநியோகஸ்தர் (பொருந்தும் இடங்களில்) உடன் தொடர்புகொள்வது உட்பட, ஆனால் அவை மட்டும் அல்லாமல், காட்டப்படும் தகவல் துல்லியமானது என்பதை இந்த நபர் உறுதிசெய்ய வேண்டும்.

**E. இணையம் வழி விற்கப்படும் Nutri-grade பானங்களுக்கு, ஒவ்வொரு இணையம் வழி பட்டியலிலும் Nutri-grade குறி காட்டப்பட வேண்டுமா?**

- ஆம். *உணவு ஒழுங்குமுறைகள்*, ஒழுங்குமுறை 184E(2)(a) ஆனது, இணையம் வழி விற்கப்படும் Nutri-grade பானங்களுக்கு, Nutri-grade பானத்தின் இணையம்

வழி படங்கள் அல்லது உரைப் பட்டியல்களுக்கு அடுத்ததாக அல்லது நேரடித் தொடர்புடையதாக Nutri-grade குறி தெளிவாகக் காட்டப்பட வேண்டும்.

- Nutri-grade பானத்தின் ஒரு இணையம் வழி பட்டியல் இந்த ஒரு அம்சத்தைக் குறிக்கிறது -
  - i. Nutri-grade பானத்தின் பெயர் மற்றும் விலை பற்றிய தகவல்கள் உள்ளன, மற்றும்
  - ii. ஒரு வருங்கால வாங்குபவரை Nutri-grade பானத்தை வாங்க அனுமதிக்கும் ஒரு இணைப்பைக் கொண்டுள்ளது, தயவுசெய்து அட்டவணை 11 இல் உள்ள இணையம் வழி பட்டியல்களின் எடுத்துக்காட்டுகளைப் பார்க்கவும்.

அட்டவணை 11. "ஒரு Nutri-grade பானத்தின் இணையம் வழி பட்டியல்களின்" எடுத்துக்காட்டுகள்

| ஒரு Nutri-grade பானத்தின் இணையம் வழி பட்டியல் | ஒரு Nutri-grade பானத்தின் இணையம் வழி பட்டியல் அல்ல |
|---|---|
| • இணைய பக்கம் ஒவ்வொரு பானத்திற்கும் தொடர்புடைய ஒரு " வாங்கப்போகும் பொருட்களின் கூடையில் சேர் " பொத்தானுடன், விற்பனைக்கு கிடைக்கும் அனைத்து Nutri-grade பானங்களையும் பட்டியலிடுகிறது<br>• தொடர்புடைய ஒரு " வாங்கப்போகும் பொருட்களின் கூடையில் சேர்" பொத்தானுடன், இணைய பக்கம் ஒற்றை Nutri-grade பான விற்பனைக்கு அர்ப்பணிக்கப்பட்டது<br>• ஒருவரின் வாங்கப்போகும் பொருட்களின் கூடையில் சேர்க்கப்படக்கூடிய குறிப்பிட்ட Nutri-grade பானங்களின் பரிந்துரைப் பட்டியல்<br>• வாங்குவதற்கான ஒரு இணைப்பு உள்ள தேடல் முடிவுகள் | • தளத்தில் கிடைக்கும் நிறுவன அடையாளங்கள் அல்லது வணிகர்களின் பட்டியல்கள்<br>• கிடைக்கும் தயாரிப்புகளின் வகைகளின் பட்டியல்கள் (உதாரணத்திற்கு புதிய தயாரிப்பு, பானங்கள், வீட்டுப் பொருட்கள்)<br>• வாங்குவதற்கான ஒரு இணைப்பு இல்லாத தேடல் முடிவுகள் |

## பிரிவு 6.5 இணைப்புகள் மற்றும் ஆதாரங்கள்

63. பின்வருபவை உட்பட்ட முக்கியமான ஆதாரங்களைப் பெற HPB இணையதளத்தை (https://www.hpb.gov.sg/healthy-living/food-beverage/nutri-grade) அணுகவும்:

a) *உணவு ஒழுங்குமுறைகள்*, ஒழுங்குமுறை 184D (5) இல் குறிப்பிடப்பட்டுள்ள Nutri-grade குறிக்கான கட்டாய விவரக் குறிப்புகளை வழங்கும் Nutri-grade குறியின் விவரக்குறிப்புகள்;

b) Nutri-grade குறியின் வரைகலை பயன்பாடுகளுக்கான பயன்பாட்டு வழிகாட்டி, இது Nutri-grade குறியின் வரைகலை பயன்பாடுகளுக்கான வழிகாட்டுதல்களை வழங்குகிறது; மற்றும்

c) Nutri-grade குறிகளுக்கான வெக்டர் கோப்புகள்.

## பிரிவு 7: விளம்பரத் தடை

### பிரிவு 7.1 பாதிக்கப்பட்ட விளம்பரங்கள் மற்றும் ஊடக தளங்கள்

64. பத்தி 65 இல் கூறப்பட்டுள்ள விளம்பரங்களுக்கு தவிர, நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, பயன்படுத்தப்படும் அல்லது வெளிப்படையாகப் பயன்படுத்தப்படும், *உணவு ஒழுங்குமுறைகள்*, ஒழுங்குமுறை 184F(1) இல் கூறப்பட்டுள்ள, "D" தரப்படுத்தப்பட்ட Nutri-grade பானங்களின் விளம்பரங்கள் அனைத்து ஊடக தளங்களிலும் தடைசெய்யப்பட்டுள்ளன..

**"விளம்பரம்" *என்பதன் வரையறை*** (உணவு விற்பனைச் சட்டத்தின் பிரிவு 2 ஐப் பார்க்கவும்)

**விளம்பரம்** என்பது உணவு விற்பனையை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ விளம்பரப்படுத்தப் பயன்படுத்தப்படும் அல்லது வெளிப்படையாகப் பயன்படுத்தப்படும் இடங்களில் ஏதேனும் ஒன்றைக் குறிக்கிறது:

a) ஏதேனும் வார்த்தைகள், எழுதப்பட்டதாக இருந்தாலும் அல்லது கேட்கக்கூடிய செய்தியாக இருந்தாலும்;
b) அசையாத அல்லது அசையும் படம், அடையாளம், சின்னம் அல்லது பிற காட்சிப் படம் அல்லது *விளக்கக்காட்சி*;
c) பத்தி (a) அல்லது (b) இல் உள்ள 2 அல்லது அதற்கு மேற்பட்ட விஷயங்களின் கலவை,

*ஆனால் எந்தவொரு பொருட்கள் அல்லது சேவைகள், பொருட்கள் அல்லது சேவைகளின் பிராண்ட் அல்லது பொருட்கள் அல்லது சேவைகளை வழங்கும் நபர் சம்பந்தமாக ஒரு தனிப்பட்ட மனிதரின் (வணிக ஆதாயம் இல்லாமல்)சொந்த கருத்துக்கள் சம்பந்தப்பட்ட தொடர்புகள் இதில் அடங்காது .*

65. *உணவு ஒழுங்குமுறைகள்*, ஒழுங்குமுறை 184F(2) இல் பட்டியலிடப்பட்டுள்ள விளம்பரங்கள் தடைக்கு உட்பட்டவை அல்ல. இவை:

a) Nutri-grade பானத்தை மொத்தமாக வழங்குவதற்காக பட்டியல், விலைப் பட்டியல் அல்லது பிற ஆவணம் மூலம் வெளியிடப்படுகிற, Nutri-grade பானத்தின் நுகர்வு தொடர்பான பரிந்துரையைக் கொண்டிருக்காத விளம்பரம்;

b) ஒரு Nutri-grade பானத்தின் பெயர் மற்றும் விலை பற்றிய தகவலை வழங்கும் ஆனால் அதன் விற்பனையை விளம்பரப்படுத்தாத மற்றும் கீழ்கண்ட இடங்களில் வெளியிடப்பட்ட விளம்பரம் -

   i. உற்பத்தியாளர், இறக்குமதியாளர், சில்லறை விற்பனையாளர் அல்லது விநியோகஸ்தரின் பெருநிறுவன இணையதளத்தில்; அல்லது

   ii. ஒரு தயாரிப்பு வெளியீட்டு நிகழ்வின் ஒரு பகுதியாக, அழைக்கப்பட்ட விருந்தினரைத் தவிர வேறு எந்த பொது மக்களும் அணுக முடியாத; அல்லது

   iii. ஒரு பத்திரிகை அல்லது ஊடக வெளியீட்டின் வடிவத்தில்

c) கீழே உள்ள (i) மற்றும் (ii) ஆகிய இரண்டு தேவைகளுக்கும் இணங்கக்கூடிய ஒரு விளம்பரம்:

i. வெளியிடப்பட்ட ஒரு விளம்பரம் -

A. சில்லறை உணவு வணிகத்தை மேற்கொள்ளும் போது Nutri-grade பானங்கள் விற்கப்பட்டால் - அந்த வணிகம் மேற்கொள்ளப்படும் உணவு நிறுவனத்தில்;

- ஒரு பொது வழிகாட்டியாக, நுழைவு அல்லது வெளியேறும் பகுதிகளால் வரையறுக்கப்பட்ட ஸ்தாபனத்தின் முழுப் பகுதியும், ஸ்தாபனத்தின் முன்பக்கம் மற்றும் பொருந்தக்கூடிய வெளிப்புறப் பகுதிகளும் இதில் அடங்கும்

B. Nutri-grade பானமானது ஒரு தானியங்கி விற்பனை இயந்திரத்தில் இருந்து முன்கூட்டியே தயாரிக்கப்பட்ட வடிவத்தில் விற்கப்பட்டால் - விற்பனை இயந்திரத்தில்;

C. Nutri-grade பானமானது தானியங்கு பான விநியோகியிலிருந்து விற்கப்பட்டால் - தானியங்கு பான விநியோகியில்; அல்லது

D. Nutri-grade பானம் இணையம் வழி விற்கப்பட்டால் - இணைய விற்பனை இடத்தில்.

ii. ஒரு கேட்கக்கூடிய செய்தியின் வடிவில் தொடர்பு கொண்ட விளம்பரங்களைத் தவிர, பானத்தின் Nutri-grade குறியின் படத்தைக் காட்டுகிற விளம்பரம். இத்தகைய விளம்பரங்களில் Nutri-grade குறியின் படத்தைக் காட்ட வேண்டிய அவசியமில்லை, ஆனால் 'இந்த தயாரிப்பின் Nutri-grade D' என்று கேட்கக்கூடிய செய்தியைக் கொண்டிருக்க வேண்டும்.

66. தடைசெய்யப்பட்ட மற்றும் தடைசெய்யப்படாதவற்றின் சுருக்கம் அட்டவணை 12 இல் உள்ளது.

<u>அட்டவணை 12: தடைசெய்யப்பட்ட மற்றும் தடைசெய்யப்படாதவற்றின் சுருக்கம்</u>

| **தடை செய்யப்பட்டது** | **தடை செய்யப்படவில்லை** |
|---|---|
| "D" தரப்படுத்தப்பட்ட Nutri-grade பானங்களின் விற்பனையை ஊக்குவிக்கும் விளம்பரங்கள்:<br>• "D" தரப்படுத்தப்பட்ட பானங்களைக் கொண்ட விளம்பரங்கள், | • எந்தவொரு குறிப்பிட்ட தயாரிப்பையும் காட்டாத நிறுவன அடையாளங்கள் கொண்ட விளம்பரங்கள்.<br>• "A", "B" அல்லது "C" தரப்படுத்தப்பட்ட Nutri-grade பானங்களின் விற்பனையை ஊக்குவிக்கும் விளம்பரங்கள்.<br>• சமூக ஊடகங்களில் உள்ள நிஜ (ஆர்கானிக்) பயனர் உள்ளடக்கம் போன்ற வணிக ஆதாயத்திற்காக அல்லாமல் ஒரு தனிநபரால் செய்யப்படும் தனிப்பட்ட கருத்துத் தொடர்புகள்.<br>• பானத்தை மொத்தமாக விநியோகிக்கும் நோக்கத்திற்காக பட்டியல், விலைப் பட்டியல் |

| | |
|---|---|
| தனியாகவோ அல்லது பிற தயாரிப்புகளுடன் இணைந்தோ;<br>• "D" தரப்படுத்தப்பட்ட Nutri-grade பானங்கள் தொடர்பாக நிதி அல்லது பொருள் தூண்டுதல்(கள்) இடம்பெறும் விளம்பரங்கள் (உதாரணத்துக்கு. பல்பொருள் அங்காடி விற்பனை ஊக்குவிப்பு விளம்பரம் இடம்பெறும் செய்தித்தாள் விளம்பரம்) | அல்லது பிற ஆவணத்தில் வெளியிடப்பட்ட மற்றும் அதன் நுகர்வு தொடர்பான பரிந்துரையைக் கொண்டிருக்காத வர்த்தக விளம்பரம்.<br>• பானத்தைப் பற்றிய தகவல் அறிக்கை, அதில் அதன் பெயர் மற்றும் விலை பற்றிய தகவல்கள் இருக்கலாம் ஆனால் அதன் விற்பனையை ஊக்குவிக்காது, வெளியிடப்பட்டது -<br>○ உற்பத்தியாளர், இறக்குமதியாளர் அல்லது சில்லறை விற்பனையாளரின் கார்ப்பரேட் இணையதளத்தில் (எ.கா. தயாரிப்பு பட்டியல்);<br>○ அழைக்கப்பட்ட விருந்தினரைத் தவிர வேறு எந்த பொது மக்களும் அணுக முடியாத தயாரிப்பு வெளியீட்டு நிகழ்வின் ஒரு பகுதியாக; அல்லது<br>○ ஒரு பத்திரிகை அல்லது ஊடக வெளியீட்டின் வடிவத்தில்.<br>• பிரிவு 7.2 இல் மேலும் விளக்கப்பட்டுள்ள ஒழுங்குமுறை 184F(2)(c) இல் உள்ள தேவைகள் பூர்த்தி செய்யப்பட்ட பின்வரும் இடங்களில் வெளியிடப்படும் விளம்பரம்:<br>○ Nutri-grade பானத்தை விற்கும் சில்லறை உணவு வணிகம் மேற்கொள்ளப்படும் உணவு நிறுவனம்;<br>○ விற்பனை இயந்திரத்தில் இருந்து பானம் விற்கப்பட்டால் அதே விற்பனை இயந்திரத்தில்; அல்லது<br>○ பானம் இணையம் வழி விற்கப்பட்டால், இணைய விற்பனை இடத்தில்.<br>• தள்ளுபடிகள், பரிசுகள், இலவச மாதிரிகள், நன்கொடைகள், மற்றவற்றுடன் இணைந்த விற்பனைகள் அல்லது பிற விளம்பரங்களை வழங்குதல் போன்ற நிதி அல்லது பொருள் தூண்டுதலை வழங்கும் செயல். |

67. "D" தரப்படுத்தப்பட்ட Nutri-grade பானங்களின் விற்பனையை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ விளம்பரப்படுத்தப் பயன்படுத்தப்படும் அல்லது வெளிப்படையாகப் பயன்படுத்தப்படும் விளம்பரங்களை ஒருவர் வெளியிடக் கூடாது, வெளியிட பயன்படக்கூடாது அல்லது வெளியிடப் பங்களிக்கக் கூடாது என்பதற்கான ஊடகத் தளங்களின் எடுத்துக்காட்டுகள் அட்டவணை 13 இல் அமைக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 13: "D" தரப்படுத்தப்பட்ட Nutri-grade பானங்களின் விற்பனையை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ விளம்பரப்படுத்தப் பயன்படுத்தப்படும் அல்லது வெளிப்படையாகப் பயன்படுத்தப்படும் விளம்பரங்களை ஒருவர் வெளியிடக் கூடாது, வெளியிட பயன்படக்கூடாது அல்லது வெளியிடப் பங்களிக்கக் கூடாது என்பதற்கான ஊடகத் தளங்களின் எடுத்துக்காட்டுகள்

| மேடை | எடுத்துக்காட்டுகள் |
| --- | --- |
| ஒளிபரப்பு | • தொலைக்காட்சி விளம்பரங்கள்<br>• வானொலி விளம்பரங்கள்<br>குறிப்பு: இலவச ஒளிபரப்பு மற்றும் கட்டணச் சேனல்கள் இரண்டிற்கும் பொருந்தும் |
| சினிமா | • திரை விளம்பரங்கள் (எ.கா. டிரெய்லர்கள், திரைப்படங்களுக்குள் தயாரிப்பு இடம்பெறல்)<br>• திரையில் இடம்பெறாத விளம்பரங்கள் |
| அச்சு | • செய்தித்தாள் விளம்பரங்கள்<br>• பத்திரிகை விளம்பரங்கள் |
| வீட்டிற்கு வெளியே | • சுவரொட்டிகள், விளம்பர பலகைகள், தரை தரையில் ஒட்டக்கூடிய விளம்பரங்கள், தூண் உறைகள்/ decals போன்றவை.<br>• பொதுப் போக்குவரத்து வலையமைப்பு (பஸ் நிறுத்தங்கள்/இடைமாற்றங்கள், ரயில் நிலையங்கள், பேருந்துகள்/ரயில்களில்) மற்றும் தனியார் வாடகை வாகனங்களில் விளம்பரங்கள் |
| நிகழ்ச்சி நடைபெறும் இடங்களில் | • சாலை நிகழ்ச்சிகள், நிகழ்வுகள், பாப்-அப் கடைகள்<br>• நிகழ்வுகளுக்குப் பயன்படுத்தப்படும் பிரசுரங்கள் மற்றும் பிணையங்கள்<br>• நேரடி அஞ்சல், வீட்டுக்கு வீடு சந்தைப்படுத்தல் |
| இணைய வழி மற்றும் கை பேசி | • இணையதளங்கள், சமூக ஊடகங்கள், கை பேசி செயலிகள்: பதாகைகள், தேடல் பட்டியல்கள், சமூக ஊடக இடுகைகள் மற்றும் விளம்பரதாரரின் சொந்த இணையதளம் அல்லது சமூக ஊடகப் பக்கம் போன்ற பணம் செலுத்தப்படாத இடங்கள் ஆகிய இரண்டிற்கும் பொருந்தும்<br>• நேரடி மின்னஞ்சல்கள் மற்றும் உரைச் செய்திகள், செய்தியிடல் பயன்பாடுகளில் உள்ள ஒளிபரப்பு சேனல்கள் |

## பிரிவு 7.2 விற்பனை இடங்களில் உள்ள விளம்பரங்களில் Nutri-grade குறியைக் காண்பித்தல்

68. "D" தரப்படுத்தப்பட்ட Nutri-grade பானங்களின் விற்பனையை ஊக்குவிக்கும் POS தளங்களில் உள்ள விளம்பரங்களுக்கு தடையிலிருந்து விலக்கு அளிக்கப்படுகின்றன, அவை Nutri-grade குறியின் படத்தை தெளிவாகக் காட்டினால்.

*69.* Nutri-grade குறியைக் காண்பிப்பதற்கான இந்தத் தேவையானது, வர்த்தக விளம்பரங்கள் அல்லது தகவல் அறிக்கைகளுக்கு (எ.கா. பெயர் குறிச்சொற்கள் அல்லது விலைக் குறிச்சொற்கள்) பொருந்தாது. இவை தடைக்கு உட்பட்டவை அல்ல.

70. பல்வேறு வகையான POS பொருட்களுக்கான தேவைகளை அட்டவணை 14 கூறுகிறது.

<u>அட்டவணை 14: POS பொருட்களின் எடுத்துக்காட்டுகள் மற்றும் அவற்றின் வெவ்வேறு தேவைகள்</u>

| **தளம்** | **விளம்பரமாக கருதப்படும்** (அதாவது D தர பானத்தைக் கொண்டிருந்தால் Nutri-grade குறியைக் காட்ட வேண்டும்) | **விளம்பரமாக <u>கருதப்படவில்லை</u>, ஆனால் கட்டாய முத்திரையிடல் தேவைகள் பொருந்தும்** (அதாவது, C/D தர பானத்தைக் கொண்டிருந்தால் Nutri-grade குறியைக் காட்ட வேண்டும்) | **விளம்பரமாக <u>கருதப்படவில்லை</u>, மேலும் கட்டாய லேபிளிங் தேவைகளும் பொருந்தாது** (அதாவது Nutri-grade குறியைக் காட்ட வேண்டிய அவசியமில்லை) |
|---|---|---|---|
| நேரடி விற்பனை கடைகள் | • சிறப்பு தயாரிப்பு காட்சிகள் (எ.கா. கோண்டோலாக்கள், தயாரிப்பு மாதிரி சாவடிகள், தள்ளுவண்டிகள், மேஜை/ தள/ குளிர்சாதன பெட்டி ஸ்டிக்கர்கள், ஸ்டாண்டீஸ் போன்றவை)<br>• கடைகளில் இயக்கப்பட்ட ஆடியோ செய்திகள் | தயாரிப்பு தொகுப்புகள் | தயாரிப்புகளின் வரம்பிற்கு விலை குறிப்பிடுகின்ற தள்ளுபடி விலைக் குறிச்சொற்கள் மற்றும் பொது விலைக் குறிச்சொற்கள் உட்பட்ட விலைக் குறிச்சொற்கள் |
| விற்பனை இயந்திரங்கள் | • இயந்திரத்தில் இருக்கும் wraps, decals போன்றவை | • தயாரிப்பு தொகுப்புகள் (இயந்திரத்தின் | |

| | | | |
|---|---|---|---|
| | | ஜன்னல் வழியாகத் தெரிந்தால்)<br>• பெயர் அல்லது விலையைக் குறிக்கும் குறிச்சொற்கள் | |
| தானியங்கு பான விநியோகிகள் | • இயந்திரத்தில் இருக்கும் Wraps, decals போன்றவை | • பெயர் அல்லது விலையைக் குறிக்கும் பட்டியல்கள் | |
| இணைய வழி விற்பனை இடம் (எ.கா. ஈ-காமர்ஸ் தளம்) | • தயாரிப்புக்கு தேவையற்ற கவனத்தை ஈர்க்கும் அம்சங்கள் (எ.கா. வகை பட்டியல்களில் பயன்படுத்தப்படும் பதாகைகள், பாப்-அப்கள், முதன்மை பக்க அம்சங்கள், தயாரிப்பு படங்கள் போன்றவை) | பட்டியல்கள் -<br>• Nutri-grade பானத்தின் பெயர் மற்றும் விலை பற்றிய தகவலைக் கொண்டிருக்கும்; மற்றும்<br>• Nutri-grade பானத்தை வாங்குவதற்கு ஒரு நபரை அனுமதிக்கும் இணைப்பைக் கொண்டிருக்கும்<br>(அட்டவணை 11 ஐப் பார்க்கவும்) | |

71. Nutri-grade பானத்தின் படத்தின் பாகமாகவோ அல்லது Nutri-grade பானத்தைப் பற்றிய நேரடிக் குறிப்புடன் விளம்பரத்தில் வேறொரு இடமாகவோ Nutri-grade குறி தோன்றலாம். முழு Nutri-grade குறி தெரிய வேண்டும் மற்றும் விளம்பரத்தின் மற்ற பகுதிகளால் பகுதியளவு தடுக்கப்படவோ அல்லது மறைக்கப்படவோ கூடாது. விளம்பரங்களில் உள்ள லேபிளின் கிராஃபிக் மற்றும் பயன்பாட்டு விவரக்குறிப்புகள் குறித்த முழு வழிகாட்டுதலுக்கு, "Nutri-grade குறியின் கிராஃபிக் பயன்பாடுகளுக்கான பயன்பாட்டு வழிகாட்டி" ஐப் பார்க்கவும்.

72. ஒலி வழி அல்லது வாய்மொழி விளம்பரங்கள் போன்ற, கேட்கக்கூடிய செய்தி வடிவில் விளம்பரம் இருந்தால், அதில் ‘இந்தப் பொருளின் Nutri-grade D ஆகும்’ என்ற செய்தி இருக்க வேண்டும்.

**A. வெளிநாட்டு ஊடகங்களில் இருந்து வரும் விளம்பரங்கள் (உதாரணத்திற்கு வெளிநாட்டு ஒளிபரப்பு நிகழ்ச்சிகள், வெளிநாட்டு வெளியீடுகள், வெளிநாட்டு நிறுவனங்களின் சமூக ஊடக விளம்பரங்கள்) தடைக்கு உட்பட்டதா?**

சிங்கப்பூரில் விளம்பரத்தை வெளியிடுவது, வெளியிட விளைவது அல்லது வெளியீட்டில் பங்கு பெறுவது போன்ற செயல்கள் மேற்கொள்ளப்படும்போது விளம்பரத் தடை பொருந்தும். எடுத்துக்காட்டாக, சிங்கப்பூரில் வெளியிடப்படும் சமூக ஊடக விளம்பரங்களும் இதில் அடங்கும்.

**B. பின்வருபவை விளம்பரத் தடைக்கு உட்பட்டதா?**

அட்டவணை 15 விளம்பரத் தடை மற்றும் அவற்றின் வகைப்பாடுகள் தொடர்பாக பொதுவாக வினவப்படும் சில வகையான ஈடுபாடுகளைக் கொண்டுள்ளது.

<u>அட்டவணை 15: பொதுவாக வினவப்படும் ஈடுபாடுகளின் வகைகள் மற்றும் அவற்றின் வகைப்பாடுகள்</u>

| ஈடுபாடு | வகைப்பாடு | குறிப்புகள் |
|---|---|---|
| இலவச பரிசுகள் | தடைக்கு உட்பட்டது அல்ல | • இலவச பரிசுகளை வழங்கும் செயல் விளம்பரத்தின் வரையறையின் கீழ் வராது.<br>• எவ்வாறாயினும், இணையதளங்கள் அல்லது செய்தித்தாள்களில் இடம்பெறும் இலவச பரிசுகளின் விளம்பரங்களில், "D" தரப்படுத்தப்பட்ட Nutri-grade பானம்(கள்) இடம்பெற்றிருந்தால், அவை தடைக்கு உட்பட்டவை. |

| | | |
|---|---|---|
| விலை விளம்பரங்கள் (எ.கா. விலை தள்ளுபடிகள், மொத்தத் தள்ளுபடிகள்) | தடைக்கு உட்பட்டது அல்ல | • விலை விளம்பரங்களை வழங்கும் செயல் விளம்பரத்தின் வரையறையின் கீழ் வராது.<br>• எவ்வாறாயினும், இணையதளங்கள் அல்லது செய்தித்தாள்களில் இடம்பெறும் விலை விளம்பரங்களில், "D" தரப்படுத்தப்பட்ட Nutri-grade பானம்(கள்) இடம்பெற்றிருந்தால், அவை தடைக்கு உட்பட்டவை. |
| பொருளின் இடம், ஒரு விற்பனை இடத்தில் | தடைக்கு உட்பட்டது அல்ல | • தயாரிப்புகளின் இருப்பிடம்/வைப்பு என்பது விளம்பரத்தின் வரையறையின் கீழ் வராது.<br>• காசாளர் அருகே தயாரிப்புகளை நிலைநிறுத்துதல் அல்லது இணைய வழி விற்பனை இடங்களுக்கு, செக்-அவுட் பக்கத்தில் உள்ள இணைய வழி தயாரிப்புகளின் பரிந்துரைக்கப்பட்ட பட்டியல் ஆகியவை இதில் அடங்கும். |

| | | |
|---|---|---|
| ஏற்பாதரவு | தடைக்கு உட்பட்டது அல்ல | • ஏற்பாதரவுகளை வழங்கும் செயல் (உதாரணத்திற்கு பணம், அந்த-வகை) ஒரு விளம்பரத்தின் வரையறையின் கீழ் வராது.<br>• இருப்பினும், "D" தரப்படுத்தப்பட்ட Nutri- grade பானம்(கள்) இடம் பெற்றிருந்தால், ஏற்பாதரவு அல்லது கூட்டுப் பங்காண்மை ஒப்பந்தத்தில் இருந்து எழும் விளம்பரங்கள் (எ.கா. நிகழ்ச்சிகளில் தயாரிப்பு இடம்பெறல்) தடைக்கு உட்பட்டவை. |
| மக்கள் தொடர்பு (PR) கருவிகள் | தடைக்கு உட்பட்டது அல்ல | • PR கிட்களை விநியோகிக்கும் செயல் ஒரு விளம்பரத்தின் வரையறையின் கீழ் வராது.<br>• இருப்பினும், "D" தரப்படுத்தப்பட்ட Nutri-grade பானம்(கள்) இடம்பெற்றிருந்தால், PR கிட் பெறப்பட்டதிலிருந்து எழும் விளம்பரங்கள், சமூக ஊடக இடுகைகள் போன்றவை, நேரடியாக/மறைமுகமாக Nutri-grade பான விற்பனையை மேம்படுத்தினால், அவை தடைக்கு உட்பட்டவை. |

| | | |
|---|---|---|
| சமூக ஊடகங்களில் செல்வாக்கு செலுத்தும் நபரின் பதிவு | வரையறுக்கப் பட்ட மற்ற காரணிகளைப் பொறுத்தது | • "D" தரப்படுத்தப்பட்ட Nutri-grade பானம்(கள்) இடம்பெற்றிருந்தால், வணிக ஆதாயத்திற்காக ஒரு தனிநபரால் செய்யப்படும் சமூக ஊடக இடுகைகள் தடைக்கு உட்பட்டவை.<br>• இருப்பினும், எந்தவொரு வணிக ஆதாயமும் இல்லாமல் தனிநபரால் செய்யப்படும் இடுகைகள் தடைக்கு உட்பட்டவை அல்ல. |

| | | |
|---|---|---|
| இருப்பு இடங்கள் | வரையறுக்கப் பட்ட மற்ற காரணிகளைப் பொறுத்தது | • எந்த ஊடக வகையிலும் (உதாரணத்திற்கு தொலைக்காட்சி நிகழ்ச்சி, திரைப்படம், இணையக் காணொளி) "D" தரப்படுத்தப்பட்ட Nutri-grade பானம்(ங்களின்) வேண்டுமென்றே மற்றும் நிதியுதவி செய்யப்பட்ட தயாரிப்பைக் காட்சிப்படுத்தல், விளம்பரத்தின் ஒரு வடிவமாகக் கருதப்படுகிறது மற்றும் இது தடைக்கு உட்பட்டது.<br>• தற்செயலான தயாரிப்பைக் காட்சிப்படுத்தல் ஒவ்வொரு சூழ்நிலையின் அடிப்படையில் மதிப்பிடப்படும். "உணவு விற்பனையை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, விற்பனையை ஊக்குவித்தல்" என்ற வரையறையை அவை பூர்த்தி செய்தால், அவை ஒரு விளம்பரமாக கருதப்படும். இது தொடர்பில் விளம்பரதாரர்கள் மற்றும் ஊடக உரிமையாளர்கள் கவனத்துடன் செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். |

| | | |
|---|---|---|
| நிறுவனத்தின் சொந்த இணையதளம்/ஊடகத்தில் உள்ள தயாரிப்புப் பட்டியல்கள் | வரையறுக்கப் பட்ட மற்ற காரணிகளைப் பொறுத்தது | • நிறுவனத்தின் சொந்த இணையதளத்தில் உள்ள தயாரிப்புப் பட்டியல்கள்/ அட்டவணைகள், கிடைக்கக் கூடிய தயாரிப்புகள் பற்றிய உண்மைத் தகவலைக் கொண்டிருக்கும் மற்றும் சில தயாரிப்புகளை மற்றவற்றுக்கு மேல் விளம்பரப்படுத்தாதவை, தடைக்கு உட்பட்டவை அல்ல.<br>• இருப்பினும், நுகர்வோருக்கு தயாரிப்பு விற்பனையை ஊக்குவிக்கும் நோக்கங்களுக்காக இதே போன்ற ஒரு பட்டியல் பயன்படுத்தப்பட்டால் (உதாரணத்திற்கு வெகுஜன அஞ்சல்கள் மூலம் விநியோகிக்கப்பட்டால்), அது ஒரு விளம்பரமாகக் கருதப்படும், தடைக்கு உட்பட்டது.<br>• மேலும், ஒரு நிறுவனத்தின் சொந்த இணையதளம்/மீடியாவில் (உதாரணத்திற்கு பதாகைகள், அழைப்புகள், பாப்-அப்) சில தயாரிப்புகளுக்கு தேவையற்ற கவனத்தை ஈர்க்கும் அம்சங்கள், ஒரு விளம்பரமாகக் கருதப்பட்டு தடைக்கு உட்பட்டவை. |

**C. விளம்பரத் வரம்புகளுக்கு உட்படுவதற்க்கு யார் பொறுப்பு?**

- *உணவு விதிமுறைக*ளுக்கு இணங்க "D" தரப்படுத்தப்பட்ட Nutri-grade பானத்தின்(ங்களின்) விற்பனையை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ விளம்பரப்படுத்தப் பயன்படுத்தப்படும் அல்லது வெளிப்படையாகப் பயன்படுத்தப்படும் விளம்பரங்களை ஒருவர் வெளியிடவோ, வெளியிடப் பயன்படுத்தப்படவோ அல்லது வெளியீட்டில் பங்கேற்கவோ கூடாது.
- ஊடகத் தள உரிமையாளர்கள், இந்த விளம்பரக் கடமைகளுக்கு இணங்குவதை ஆதரிப்பதற்கு வலுவாக ஊக்குவிக்கப்படுகிறார்கள். Nutri-grade பானங்களைத் தங்கள் தளங்களில் விளம்பரம் செய்பவர்கள், இந்த விளம்பரக் கடப்பாடுகளைப் பற்றி அறிந்திருப்பது, இணங்காத உள்ளடக்கத்தை அகற்றுவதற்கு அதிகாரிகளுடன் இணைந்து செயல்படுவது உட்பட, ஆனால் வரையறுக்கப்படவில்லை என்பதை உறுதிசெய்ய வேண்டும்.

**D. நேரடி ஒளிபரப்பு நிகழ்ச்சி அல்லது பிராந்திய ஒளிபரப்பின் ஒரு பகுதியாக இருக்கும் விளம்பரங்கள் விளம்பரத் தேவைகளுக்கு உட்பட்டதா?**

- ஆம், விளம்பரங்கள் "D" தரப்படுத்தப்பட்ட Nutri-grade பானங்களின் விற்பனையை ஊக்குவிக்குமெனில்.

## தொடர்புகள்

Nutri-grade பானங்களுக்கான முத்திரையிடல் மற்றும் விளம்பரத் தேவைகள் தொடர்பான கேள்விகளுக்கு:

நிலை 5, கொள்கை மற்றும் உத்தி பிரிவு
சுகாதார மேம்பாட்டு வாரியம்
3 இரண்டாவது மருத்துவமனை அவென்யூ
சிங்கப்பூர் 168937

மின்னஞ்சல்: Nutri-Grade@hpb.gov.sg

உணவு முத்திரையிடல் தொடர்பான முழுத் தேவைகளுக்கு *உணவு ஒழுங்குமுறைகளைப்* பார்க்கவும்.